Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-29 12-06-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 114


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12121)

# ஈ.பி.டி.பி. காரியாலயம் மீது கிளைமோர் தாக்குதல்;

# ராணுவப்புலனாய்வு அதிகாரி உட்பட 2 பேர் பலி!

## மேலும் ஆறு பேர் படுகாயம்

(வவுனியா)

**வவுனியா ஈ.பி.டி.பி காரியாலயத்தின் மீது நடத்தப்பட்ட கிளைமோர் குண்டுத்தாக்குதலில் இராணுவ புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவரும் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளதுடன் இராணுவ புலனாய்வுப் பிரிவின் உறுப்பினரும் ஐந்து ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 11.15 மணியளவில் இடம்பெற்றது.**

இந்தச் சம்பவத்தில்இராணுவபுலனாய்வுப் பிரிவினை சேர்ந்த லான்ஸ்கோப்ரல் ஆர். ஏச்.எஸ் எட்வேட் (வயது-31), கொல்லப்பட்டதுடன் ஈ.பி.டி.பி அமைப்பைச் சேர்ந்த கண்ணன் (வயது-28) என்பவரும் கொல்லப்பட்டுள்ளார்.

மற்றொரு இராணுவ புலனாய்வு அதிகாரி அஜித் டி சில்வா (வயது-30) என்பவர் படுகாயங்களுக்கு உள்ளானார். ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியைச் சேர்ந்தவர்களான சண்முககாந்தன் விமலதாஸ் (வயது-30), பஸ்தியாம்பிள்ளை அமலதாஸ் (வயது-28), கோவிந் தராஜ் சிவகுமார் (வயது-25), மயூரன் (வயது-26), முகுந் தன் (வயது-25) ஆகியோரும் காயங்களுக்கு உள்ளாகினர்.

மதில் ஒன்றில் பதுக்கி (12ஆம் பக்கம் பார்க்க)



## ஓமல்பேசோபிததேரர் நேற்று உண்ணாவிரதத்தை கைவிட்டார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கையை அரசாங்கம் செய்துகொள்ளக் கூடதென கோரி கண்டி சிறி தலதா மாளிகைக்கு முன்னால் சாகும் வரை உண்ணாவிரதத்தினை மேற்கொண்டு வந்த ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் ஓமல் பேசோபித தேரர் நேற்று காலை 9-18 மணியளவில் தனது உண்ணா (12ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய பிக்குமார் முன்னணி உண்ணாவிரதத்தை ஆரம்பித்தது

(கொழும்பு)

தேசிய பிக்குமார் முன்னணி நேற்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் முன்னால் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. சனாதிபதி பொதுக்கட்டமைப்புத் தொடர்பான யோசனைகளை வாபஸ் பெற வேண்டுமென தெரிவித்தே தேசிய பிக்குமார் முண்ணணியின் தலைவர் (12ஆம் பக்கம் பார்க்க)

- பொதுக்கட்டமைப்பில் 30ஆம் திகதிக்கு முன் கைச்சாத்திடாவிட்டால்-

# சனாதிபதி பதவியை ராஜிநாமாசெய்ய சந்திரிகா குமாரதுங்க தீர்மானம்?

(கொழும்பு)

உத்தேசப் பொதுக்கட்டமைப்பில் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் கைச்சாத்திட முடியாது போனால் பதவியை ராஜினாமா செய்வதற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு முதல் வெள்ளிஅதிகாலை வரை அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் சுமார் ஆறு மணி நேரம் நடந்த பேச்சுவார்த்தையின் பின்னரே சனாதிபதி இந்த முடிவுக்கு வந்துள்ளதாக கூறப்படுகிறது.

சிறிலங்காவின் நலனைக் கருத்திற்கொண்டுதான் இந்த பொதுக் கட்டமைப்பில் கைச்சாத்திட தீர்மானித்தாக சனாதிபதி இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கூறியுள்ளார்.

எதிர்வரும் 30ஆம் திகதிக்குள் தன்னால் இந்தப் பொதுக்கட்டமைப்பு தொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திட முடியாது போனால் தனக்கு இந்த காரியத்தை ஆற்று (12ஆம் பக்கம் பார்க்க)

# எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ளத் தயார்; ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

எந்தத்தேர்தல் வந்தாலும் அதை எதிர் கொள்ள தமது கட்சி தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

ஐக்கி தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க இது குறித்து கூறுகையில்; ஐ.தே. கட்சியின் பிரதான கிளைச்சங்கங்கள், இளைஞர் மற்றும் மகளிர் சங்கங்களை நியமிக்கும் நடவடிக்கைகள் முழுவதும் பூர்த்தியடைந்து விட்டன. நாடு முழுவதும் பத்து சங்கங்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்றார்.

## சொருவிலவில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் பலி; இருவரைக் காணவில்லை

பொலநறுவை மாவட்டம், சொருவிலவில் நண்பர்களுடன் துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்து கொண்டிருந்த ஒருவர் நேற்றுப் பிற்பகல் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சொருவிலவைச் சேர்ந்த சண்முகம் செல்வராசா (வயது-23) (12ஆம் பக்கம் பார்க்க)



# மக்கள் குடியமர படையினரை விலக்கக்கோரி தென்மராட்சியில் நேற்று வீதி மறியல் போராட்டம்

(தென்மராட்சி)

தமது சொந்த இடங்களில் தாம் குடியிருக்க படைகளை விலக்கக்கோரி தென்மராட்சி கிழக்கு இடம் பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று மாபெரும் வீதி மறியல் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

காலை 10.15 மணியளவில் மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை முன்றலில் இருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி பிரதான சாலையூடாக படைமுகாம்களை கடந்து எழுதுமட்டுவாள் ஆசைப்பிள்ளை ஏற்றம் என்ற இடம் வரை சென்று அங்கு வீதிகளை மறித்து 11.45 வரை மக்கள் வீதியில் அமர்ந்து கோசங்களை இட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.போராட்டத்தின் தேவைகுறித்து கருத்துரைகளை பொது அமைப்புகளின் தலைவர் அருந்தவபாலன், தேசிய எழுச்சிப் பேரவை பேராளர் கந்தசாமி, பாராளுமன்ற உறுப் (12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்குண்டு

இல 59/3 முரசுமோட்டையில் வீடு,கிணறுடன் தென்னை, மா, மற்றும் ஏனைய பயன் தரும் மரங்கள் அடங்கியகாணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்வோர் நேரில் வரவும் (6256)

### வீடு விற்பனைக்குண்டு

புலோலி தெற்கு பல்லப்பையல் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்பவர்கள் பொன்பொழில் இல்லம், பல்லப்பை- தெற்கு புலோலி. தொடர்பு -நிருஷன் 077-3164361. (6257)

### விசேட ஆங்கில வகுப்புக்கள் GRAMMAR & SPOKEN

O/L, A/L மாணவர்களுக்கும், தொழில் புரிவோருக்கும் காலம்:- புதன், சனி, ஞாயிறு மாலை 5-6 மணி, இடம்:-அன்னை வேளாங்கன்னி ஆலயம் முன்பாக, உதயநகர் கிழக்கு. ஆசிரியர்:- K.Yokan (BBA & NDE). (6253)

### வீதி திருத்தம்

மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்ட 14 கி.மீ நீளமான கௌதாரிமுனை வீதியும் 4 கி.மீ நீளமான நாகதேவன்துறை வீதியும் ஆரம்ப திருத்தவேலைகள் நடைபெற்றுவருகின்றன. (34)

## நியாப் II இல் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களுக்கான கணிப்பீடு

முல்லைத்தீவு மாவட்டத்தில் நியாப் II இல் தெரிவு செய்யப்பட்ட 25 கிராமங்களின் கணிப்பீடு, பகுப்பாய்வு, விவசாய அபிவிருத்தி திட்டம் தொடர்பான அறிக்கைகள் பல்வேறுபட்ட திணைக்கள உத்தியோகத்தர்கள் அடங்கிய சமுதாய உதவி குழுவினரால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வு கடந்த 2 ஆம் திகதி தொடக்கம் ஒட்டுசுட்டான் நீர்ப்பாசன வளாகத்தில் நடைபெறுகின்றது. 2, 3 ஆம் திகதியில் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் தலைமை யில் நடைபெற்ற நிகழ்வில் அப்பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் பகுப்பாய்வும், 6 ஆம் திகதி துணுக்காய் பிரதேச செயலர் தலைமையில் துணுக்காய் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களுக்கான பகுப்பாய்வும் 9, 10, 11ஆம் திகதிகளில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் செல்வி. சுபாசினி கந்தையா தலைமையில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களின் பகுப்பாய்வும், அறிக்கை தயாரிப்பும் நடைபெற்றது.

13 ஆம், 14 ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களின் பகுப்பாய்வும், 16, 17 ஆம் திகதிகளில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குமான பகுப்பாய்வு நடைபெறவுள்ளன. (05)

## இடைத்தங்கல் முகாமிற்கான முன்பள்ளி திறந்து வைப்பு

(அலுவலக செய்தியாளர்)

செம்பியன்பற்று இடைத்தங்கல் முகாமிற்கான முன்பள்ளி நேற்று முன்தினம் 3.00 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கேற்றல் இடம் பெற்றது. மங்கல விளக்கினை வடமராட்சி கிழக்கு செயலணிக் குழு தலைவர் யாழ் அமுதன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து முன்பள்ளி மண்டபத்தின் நாடாவினை போறூட் திட்ட முகாமையாளர் ஆன் வெட்டித் திறந்து வைத்தார்.

மேற்படி நிகழ்வானது செம்பியன்பற்று இடைத்தங்கல் முகாமில் முகாம் தலைவர் இம்மனுவேல் தலைமையில் இடம் பெற்றது. (தீ)

## சாய்ந்து விழுந்துள்ள மரத்தினை அகற்றக் கோரிக்கை

(புதுக்குடியிருப்பு)

கடந்த ஒருவாரத்துக்கு மேலாக புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு பிரதான வீதியில் ஜனனி போக்குவரத்து சேவை காரியாலயத்துக்கு அருகாமையில் வீதியில் மரம் ஒன்று சரிந்து மின் விநியோக வயரில் தாங்கியுள்ளது.

இம்மரம் எந்த நேரமும் விழும் அபாய நிலையில் உள்ளது. பயணிகள் வீதியால் செல்லும் போது இம் மரம் வீழ்ந்தால் ஆபத் துகள் ஏற்பட நிறைய வாய்ப்புண்டு. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டுமென மக்கள் எதிர் பார்க்கின்றனர். (08)

## சாவு அறிவித்தல்

### செல்லர்–செல்லவள்ளி

மந்துவில் கொடிகாமத்தை பிறப்பிடமாகவும், இலக்கம் 40 செல்வபுரம் வவுனிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் செல்லவள்ளி அவர்கள் 11.06.2005 அன்று (சனிக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் அவர்களின் பாசமிகு மனைவியும், முத்தர், ஆண்டர் குஞ்சாச்சி, அம்மணி, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இரத்தினம் செல்வபுரம் , தவம் கருணவாய், தவமணி மந்துவில், நாகேந்திரம் கொல்லவிளான்குளம், செல்வநாயகம் இலக்கம் 40 செல்வபுரம், திருச்செல்வம் பாண்டியன்குளம், சிவோசிவ செல்வா கனடா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுந்தரம் செல்வபுரம், செல்லத்துரை கருணவாய், நளினி கனடா, தங்கராசா மந்துவில், கமலம் கொல்லவிளான்குளம், விஜயமலர் செல்வபுரம் தங்கவேல் பாண்டியன்குளம் ஆகியோரின் பாசமிகு மாமியாருமவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12.06.2005 இன்று பிற்பகல் 2.00 மணிக்கு இலக்கம் 40 செல்வபுரம் வவுனிக்குளம் இல்லத்தில் நடைபெற்று பாலியாறு இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:-
செல்வநாயகம் (மகன்),
இலக்கம்.40, செல்வபுரம்.

(சி.12201)

## மாவீரர் போராளிகள்குடும்ப நலன் காப்பகத்தினால் நடாத்தப்படுகின்ற

### இலவச கணினி, தையல் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

இலவச கணினி, தையல் ஆகிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மாவீரர்,போராளிகள் குடும்பங்களில் கல்வி கற்று இடைவிலகிய மாணவர்களும் முன்னர் எம்மிடம் பதிவினை மேற்கொண்டவர்களும் எதிர்வரும் 15.06.2005 இற்கு முன்னதாக மாவீரர் போராளிகள் குடும்பநலன்காப்பகம், நடுவப்பணியகம், கனகபுரம், கிளிநொச்சி. என்னும் முகவரியில் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**கற்பிக்கப்படும் பாடங்கள்**

கணினி

01. அடிப்படை கணினி கற்கை நெறி
   - ☞ Microsoft Word
   - ☞ Microsoft Excel
   - ☞ Microsoft Access
   - ☞ Microsoft Power Point
   - ☞ English
02. மேலதிக கணினி கற்கை நெறி
   - ☞ Photoshop
   - ☞ Pagemaker
   - ☞ Corel Draw
   - ☞ Hardware
   - ☞ English

தையல்

01. அடிப்படை தையல் கற்கை நெறி
02. மேலதிக தையல் கற்கை நெறி
   - மின்சாரத்தில் இயங்கும் தையல் இயந்திர பயிற்சி

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

மாவீரர், போராளிகள் குடும்ப நலன் காப்பகம்
நடுவப்பணியகம்,
கனகபுரம்,
கிளிநொச்சி.

(சி.12048)

## பணிநிலை வெற்றிடம்

**முத்துஐயன்கட்டு பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம் (வ.து) ஒட்டுசுட்டான். கீழ்க் குறிப்பிடப்படும் பணி நிலைகளிற்கு விண்ணப்பிக்க விரும்பும் ஆண் விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**விண்ணப்பங்கள் யாவும் தலைவர், முத்துஐயன் கட்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒட்டுசுட்டான் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அன்றேல் நேரடியாகவோ 2005.06.25 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்டு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பணி தொடர்பாக விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.**

**வயது எல்லை:-** *18-45* வயது.

**பதவி:-களஞ்சிய முகாமையாளர்:(கிளைமுகாமையாளர்) 208/15**

**சம்பள அளவுத்திட்டம்:- 3500 - 65/10 - 70/10 -4850/=**

**தகைமை:-**

I. கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் இரு வருடத்திற்குக் குறையாத அனுபவம்

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் 17 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் நான்கு வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

II. கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தராதரப்பத்திரம், க.பொ.த.சாதாரண தரம் இரு அமர்விற்கு மேற்படாமல் கணிதம்,தமிழ் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தி, சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**சேவை நிபந்தனைகள்:-**

அ. பதவி அமைய அடிப்படையிலானது,
ஆ. நியமிக்கப்படுபவர் ஆரம்பத்தில் பயிற்சியாளராகவே சேர்த்துக் கொள்ளப்படுவர்.
இ. பயிற்சி முடிவில் திறமை தகுதி அடிப்படையில் சங்கத்திற்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி அங்கீகாரத்திற்கும் குறிப்பிட்ட சம்பளத்திட்டத்திற்கும் இருக்கும் வெற்றிடங்களிற்கும் அமைய நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கைமேற்கொள்ளப்படும்.
ஈ. பயிற்சிக்காலத்தில் கடமைபுரியும் நாளொன்றுக்கு ரூபா 200 /= வீதம் கொடுப்பனவாக வழங்கப்படும்.

**பதவி:- காவலாளி:- 315/17**

**சம்பளத்திட்டம்:- 3000 - 55/10 - 60/10 - 4150.00**

**தகைமை:-**

I. எட்டாம் வகுப்பு வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும்,
II. சிறந்த ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**சேவை நிபந்தனைகள்:-**

அ. பதவி அமைய அடிப்படையிலானது,
ஆ. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு:-** (ஏனைய விடயங்கள் மேற்குறிப்பிட்டவாறு அமையும்)

**தலைவர்:-**
**முத்துஐயன்கட்டு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்,**
**ஒட்டுசுட்டான்,**
**2005.06.10**

(சி.12200)

# பாக்தாத்தில் மூன்று தாக்குதல்களில் 29 பேர் உயிரிழப்பு ;32 பேர் படுகாயம்

(பாக்தாத்)

**ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நேற்று தீவிரவாதிகள் நடாத்திய மூன்று வெவ்வேறு தாக்குதல்களில் ஈராக் கொமோண்டோப் படையினர் உட்பட 32 பேர் உயிரிழந் துள்ளனர் பலர் படுகாயமடைந்தனர்.**

ஈராக்கின் விசேட பொலிஸ் பிரிவின் உயர் அதிகாரி போன்று சீருடையில் பாக்தாத்தில் உள்ள பொலிஸ் தலைமை நிலையத்திற்குள் பிர வேசித்த தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் குண்டுகளை வெடிக்கச் செய்ததினால் எட்டு பொலிஸ் கொமாண்டோக்கள் உயிரிழந்தனர். இருபது பேர் காயமடைந்துள்ளனர். பொலிசாரின் அடையாள அட்டையுடன் அங்கு சென்ற தற்கொலைக் குண்டுதாரி ஏனைய பொலிஸ் அதிகாரிகளுடன் கடமைக்குச் செல்வது போல கட்டடத்தினுள் பிரவேசித்து குண்டுத் தாக்கு தலை நடத்தியுள்ளார்.

இதற்கிடையில் சியா முஸ்லிம்கள் வாழும் பகுதியில் கார்க்குண்டு ஒன்று வெடித்ததில் பதினொருபேர் உயிரிழந்துள்ளனர். இருபத்தொன்பது பேர் காயமடைந்துள்ளனர். பாக்தாத்தின் தென் பகுதியில் பேருந்து ஒன்றின் மீது துப்பாக்கி நபர்கள் தாக்குதல்களை நடத்தியதில் பத்து பயணிகள் உயிரிழந்துள்ளனர். மூன்று பேர் காயமடைந்துள்ளனர். அதிகாரிகள் தகவல் தருகையில்;பேருந்தின் இரு பகுதிகளிலும், இரண்டு மோட்டார் வாகனங்கள் வந்ததும், அதில் இருந்த ஆயுத பாணிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக தெரிவித்தனர்.




அவுஸ்திரேலியாவிலுள்ள சீன ராஜ தந்திரியான ஷென் யங்ளிங் என்ற 37 வயது பிரஜை தமக்கு அங்கு பாதுகாப்பு இல்லை எனக் கூறி கடந்த மாதம் முதல் தலை மறைவாகி வரும் நிலையில் அவருக்கு அரசியல் அகதி என்ற அந்தஸ்து வழங்குமாறு கோரி சிட்னியில் ஆர்ப்பாட்டம் நடத்தும் போலன் கொங் அமைப்பினர்.



பாக்தாத்தில் நடைபெறும் மின்னல் இராணுவ நடவடிக்கையின் போது அமெரிக்க டாங்கி ஒன்று உருளுவதைக் காணலாம். இத் தேடுதல் நடவடிக்கையின் போது 11 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

# சதாம் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படும்

## ஈராக் பிரதமர் அறிவிப்பு


(பாக்தாத்)

சதாம் ஹுசேன் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு மரண தண்டனை கிடைக்கும் என்று ஈராக் பிரதமர் கூறியிருக்கிறார்.

அவர் மீது 500இற்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளன. விஷ வாயுவைப் பயன்படுத்தி சிறுபான்மை இன மக்களைக் கொன்று குவிக்க உத்தரவிட்டதும் இதில் அடங்கும். இன்னும் இரண்டு மாதத்தில் அவர் மீதான விசாரணைகளைத் தொடங்க இருக்கிறது. இதற்காக தனி நீதிமன்றங்கள் அமைக் கப்பட்டுள்ளன.

இது பற்றி ஈராக் பிரதமர் இப்ராகிம் அல் ஜபாரி கூறியதாவது; சதாம் ஹுசேன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் மிகக் கடுமையானவை. இந்தக் குற்றங்களுக்காக அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம். ஆனாலும் குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்ட பிறகே தண்டனை வழங்கப்படும்.

இன்னும் இரண்டு மாதத்தில் தனி நீதிமன்றில் விசாரணை தொடங்கும். 23 ஆண்டு கால ஆட்சியில் சதாம் ஹுசேன் இழைத்த கொடுமைகள் அனைத்தும் வெளியாகும் என்றார்.



ஈராக்கில் சதாம் ஹுசேன் ஆட்சி அகற்றப்பட்ட பின் அங்கு மரண தண்டனை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது. அங்கு புதிய ஆட்சி அமைத்த பின் மீண்டும் மரண தண்டனை சட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

இதற்கிடையே சதாம் ஹுசேனுக்காக ஆஜராகும் சட்டத்தரணி கூறும் போது;குற்றச்சாட்டுக்கள் என்ன என்பது குறித்து தொடர்பான தெளிவான ஆவணங்களை எங்களுக்குத் தரப்படவில்லை.சதாம் ஹுசேனை நாங்கள் இதுவரை இரண்டு தடவை மட்டுமே சிறையில் சந்தித்திருக்கின்றோம் என்று தெரிவித்தனர்.


# சீனாவின் உல்லாச விடுதியில் தீ: 30 பேர் உடல் கருகி உயிரிழப்பு

(பீஜிங்)

சீனாவின் தெற்குப் பகுதியிலுள்ள ஹுவாஸ்டாங் மாகாணத்தில் உள்ள ஷாங்டாஷ நகர ஹோட்டலில் திடீர் என்று தீப் பிடித்துக் கொண்டதில் 30 பேர் உடல் கருகிப் பலியாகினர்.

இடிபாடுகளுக்கு இடையே கருகிய நிலையில் ஐந்து உடல்கள் மட்டுமே மீட்கப்பட்டதாகவும், இவர்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளும் அடங்குவதாகத் தெரி விக்கப்படுகிறது.

தீயை அணைக்க ஏராளமான தீயணைப்பு வீரர்கள் மூன்று மணி நேரத்திற்கும் மேலாகப் போராடினர் தீவிபத்துக்கு காரணம் என்ன என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.



நேற்று முன்தினமிரவு பாக்தாத்தில் சியா முஸ்லிம் பிரதேசத்தில் நடந்த கார்க்குண்டுத் தற்கொலைத் தாக்குதலில் பலியான ஒருவரின் உடலை வீதியில் எடுத்துச் செல்லப்படுவதையும், உறவினர் அழுது புலம்பியவாறு செல்வதையும் கைவிடப்பட்ட வாகனம் ஒன்றை உற்று நோக்கும் சிறுவர்களையும் படங்களில் காணலாம்.

# ராமர் படம் பொறித்த பாதணி திரும்பப் பெற்றது பிரான்ஸ் நிறுவனம்



(லண்டன்)

புதுமையான ஆடைகள், புதுமையான பாதணிகள் மீதான மோகம் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து சில நிறுவனங்கள் இந்து கடவுள் படம் போட்ட பாதணிகளைத் தயாரித்து தங்கள் விற்பனையை அதிகரித்துக் கொள்ள முயன்றன.

பிரான்சிலுள்ள 'மினெலி' பாதணி நிறுவனம் ராமர் படம் போட்ட பாதணிகளை பெருமளவுக்கு தயாரித்து நாடு முழுவதும் விற்பனைக்கு விட்டது. இங்கிலாந்து உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தது.

இது பிரான்சிலுள்ள இந்துக்களிடம் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியது. பிரான்சில் மட்டும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இந்துக்கள் வசிக்கிறார்கள். தங்கள் ஆன்மீக மத உணர்வை இது புண்படுத்துவதாக இந்து அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்தன.

நாளுக்கு நாள் எதிர்ப்பு அதிகரித்ததைத் தொடர்ந்து மினெலி நிறுவனம் ராமர் படம் போட்ட பாதணிகளை இப்போது வாபஸ் பெறத் தொடங்கி விட்டது. ராமர் படம் போட்ட பாதணிகளைத் தயாரிப்பதையும் அந்த நிறுவனம் நிறுத்திக் கொண்டன. கடைகளில் உள்ள இருப்புக்கள் அனைத்தையும் திருப்பி அனுப்பும்படி அந் நிறுவனம் கேட்டிருக்கிறது.

# போர்விமானங்களை பாகிஸ்தானுக்கு விற்பதா? அமெரிக்க பாரா௳. உறுப்பினரின் தீர்மானம் தோல்வி

(வோஷிங்டன்)

பாகிஸ்தானுக்கு "எப்-16"ரக போர் விமானங்களை விற்பதை எதிர்த்து அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினரால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் தோல்வியடைந்துள்ளது.

பாகிஸ்தானில் சனநாயக ஆட்சியைக் கவிழ்த்து விட்டு இராணுவ ஆட்சி கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து போர் விமான விற்பனைக்கு அமெரிக்க அரசாங்கம் தடைவிதித்தது. ஆனால் கடந்த மார்ச் மாதம் இந்தத் தடையை புஷ் அரசு விலக்கியதுடன் எப்.16ரக போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு விற்கப் போவதாகவும் அறிவித்தது. இதற்கிடையில் போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு விற்பதைத் தடை செய்யக் கோரும் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

சனநாயகக் கட்சியின் நியோர்க் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும், இந்திய ஆதரவு பாராளுமன்றக் குழுவின் இணைத் தலைவருமான ஆக்கர்மன் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். சர்வதேச உறவுக்கான பாராளுமன்ற சபையில் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

இதன்மீது விவாதம் நடந்தது. அயோபா குடியரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜிம். லீச், சனநாயகக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டாம், லாண்டோஸ் ஆகியோர் இந்தத் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். போர் விமானத்தை விற்றால் இந்தியா-பாகிஸ்தானிடையே ஆயுதப்போட்டி ஏற்படும் என்று ஆக்கர்மன் கூறியதை லாண்டோஸ் ஏற்க மறுத்தார். போர்விமானங்களை விற்பதைத்தடுத்தால் அது பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பின் கரத்தைப் பலவீனப்படுத்தும் என்றும் அவர் கூறினார். கடைசியில் இத்தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடை பெற்றது. அதில் எதிரான தீர்மானம் தோல்வியடைந்த

# கௌசல்யன் நடமாடும் மருத்துவ சேவை

# வவுனியா வடக்கில் நடைபெற்றது!

## –பெருமளவான மக்கள் பயன்பெறுகை

(அலுவலக செய்தியாளர்)

**வைத்தியவசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டிருக்கும் மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் முகமாக தமிழீழ மருத்துவப் பிரிவால் உருவாக்கப்பட்ட லெப். கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவ சேவையின் இரண்டாவது சேவை வவுனியா வடக்கில் நேற்று முன்தினம் ஆரம்பமாகி இருநாட்கள் நடைபெற்றன.**

காலை எட்டு மணியளவில் வவுனியா வடக்கு பாலமோட்டை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில், பொதுச்சுடரை தியாகி திலீபன் மருத்துவ சேவை மருத்துவ ஆலோசகரும், வைத்திய கலாநிதியுமான திருமதி





எழுமதி கரிகாலன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் விக்கினேஸ்வரன் ஏற்றினார். லெப். கேணல் கௌசல்யனின் திருவுருவப் படத்திற்கு தமிழீழ மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ரேகா மற்றும் நடமாடும் மருத்துவப் பிரிவின் மருத்துவர் தேவா ஆகியோர் சுடரேற்றினர். உருவப்படத்திற்கான மலர்மாலையை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் அணிவித்தார். தொடர்ந்து மருத்துவ சேவையின் நோக்கம் பற்றி தமிழீழ மருத்துவப்பிரிவு மருத்துவர் ஓவியன் உரையாற்றினார்.

இந்த வைத்திய சேவை நேற்றும் நடைபெற்றது. முதல் நாள் பணியில் பாலமோட்டை அ.த.க. பாடசாலை, கோவில் குஞ்சுக் குளம் அ.த.க. பாடசாலை, மாதர்பணிக்கர்மகிழங்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளிலும் கல்வி கற்கின்ற 450இற்கும் அதிகமான மாணவர்களுக்கான வைத்திய சிகிச்சைகள், வைத்திய ஆலோசனைகள் என்பன வழங்கப்பட்டன.

வைத்திய ஆலோசனைகளின் பின்னர் மாணவர்களுக்கு பல்தூரிகை, பற்பசை என்பனவும் வழங்கப்பட்டன. வைத்திய ஆலோசனைகளை வைத்திய கலாநிதி. எழுமதி கரிகாலன் வழங்கினார்.

இதேபோல, மேற்படி பகுதிகளில் வசித்துவரும் மக்களின் வீடுகள் தோறும் சென்று மருத்துவ விழிப்புணர்வுச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டதுடன் வைத்திய சேவைகளும் வழங்கப்பட்டன.

இதேவேளை நேற்று நடைபெற்ற சேவையில் சத்திரசிகிச்சை, பற்சிகிச்சை, நோய்ப் பரிசோதனைகள், சுகாதார விழிப்புணர்வுக் கருத்தூட்டல்கள் உட்பட பல்வேறு மருத்துவ செயற்பாடுகளும் நடைபெற்றன. (லோ)



பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமையன்று நடைபெற்ற சங்கம நிகழ்வில் மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு அவர்களது பெற்றோர், உறவினர்கள் ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவிப்பதனைப் படத்தில் காணலாம். (படம்:–சோதி)

## முல்லை மாவட்ட வைத்தியசாலைக்கான கட்டட வேலைகள் ஆரம்பம்

(முல்லை)

முல்லை மாவட்ட பொது வைத்தியசாலைக்கான கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

நீராவிப்பிட்டியில் அமைந்துள்ள மாஞ்சோலை என்ற காணியிலேயே நிகொட்திட்டத்தின் நிதியுதவியில் இந்தப் பொது வைத்தியசாலை அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(20)

## வீதி விபத்தில் இருவர் படுகாயம்!

(அலுவலக செய்தியாளர்)

மல்லாவி நகர்ப்பகுதியில் ஏற்பட்ட வீதி விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவமானது நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் நடை பெற்றுள்ளது. மல்லாவி நகர்ப்பகுதியில் உந்துருளியில் பயணித்த எஸ்.சுமன் (வயது-24) என்பவர் வீதிக்குக் குறுக்கே வந்த துவிச்சக்கரவண்டியுடன் மோதி வீதிக்கு அருகில் இருந்த கல்லு டன் அடிபட்டு படுகாயமடைந்துள்ளார்.

அதேவேளை துவிச்சக்கர வண்டியின் பின் இருக்கையில் இருந்து பயணித்த ச.நிவாசினி (வயது-11) என்பவர் உந்துருளி மோதியதில் படுகாயமடைந்துள்ளார்.

இவர்கள் இருவரும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக எஸ்.சுமன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (24, கு)

## சிறுவர்களின்துணையுடன் திருடி வந்தவர் பிடிபட்டார்

(மன்னார்)

மன்னார் பஸ்நிலையத்திற்கு முன்பாக இருந்த கடையொன்றில் களவு போன பத்து இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களில் ஒருபகுதி மன்னார் நகரத்தில் வைத்து பிடிக்கப்பட்டுள்ளது.

மிகுதிப் பொருட்கள் மன்னார் கற்பிட்டிப்பகுதியில் இருப்பதாக தகவல்கிடைத்துள்ளதாகவும் தெரிவித்த மன்னார் மாவட்ட பொலிசார் கைது செய்யப்பட்ட நபரை மன்னார் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தினர். இவரை 14நாள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தர விட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபருடன் மேலும் 15 வயதிற்குட்பட்ட ஐந்து சிறுவர்கள் இணைந்து இரவு வேளையில் கடையின் கூரைகளை அகற்றிபொருட்களை களவாடி வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (18)

## நுளம்பு வலைகள் அன்பளிப்பு

(மன்னார்)

'சோஆ' நிறுவனத்தினர் உலக சுகாதார ஸ்தாபனத்தால் **(W.H.O)** சிபார்சு செய்யப்பட்ட நுளம்புவலைகளை நேற்று முன்தினம் சாவற்கட்டு,எமில் நகர், சின்னக்கடை, பள்ளிமுனை ஆகிய கிராம மக்களிற்கு வழங்கினர். வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் வைத்து சோஆ நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் றோபர் முன்நிலையில் இவை வழங்கப்பட்டன. முந்நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இந்த நுளம்புவலைகள் வழங்கப்பட்டுள்ளன. (18)

## உளவளச் சேவை மேம்பாட்டு நிலையம் அமைக்க கிளிநொச்சியில் ஆராய்வு

உளவளத்துணை செயற்பாடு ஒருங்கிணைப்புக் கலந்துரையாடல் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் ந.க இரத்தினம் தலைமையில் நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்கு கிளிநொச்சி திட்டமிடல் செயலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் வன்னியில் செயற்படும் அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், உளவளச் சேவையாளர்கள், வைத்தியகலாநிதிகள், தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு உளவளச் சேவை மேம்பாடு பற்றி கலந்துரையாடியதுடன், வடகிழக்கு பகுதிக்கான உளவளச் சேவை மேம்பாட்டு மைய நிலையம் அமைப்பது பற்றியும் ஆராயப்பட்டது.

இந்த உளவள மையச் சேவை நிலையம் மூலம் உளவளப் பயிற்சி, வதிவிடவசதி, உளவள ஆட்படுத்தல், சிகிச்சை வசதி, உளவள மத்திய சிகிச்சை மருத்துவ நிலையம் அமைத்து அதில் நிபுணத்துவ மன நோயியல் நிபுணரின் சேவை மையம் ஒருங்கிணைப்பது பற்றியும் ஆராயப்பட்டது. அத்துடன் வட கிழக்கு மாகாணத்திலும் உளவளப் பாதிப்பிற்குள்ளானவர்களுக்கான சேவையும் அந் நிலையம் ஊடாக வழங்க ஆராயப்படவுள்ளது.

உளவள வெளிக்கள சேவையாளரின் சேவையை ஒருங்கிணைத்து சேவை மேம்பாடு செய்வதற்குமான திட்டமும் கலந்துரையாடப்பட்டது. இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன் உளவளத்துணைச் சேவையை செய்யும் ஒவ்வொரு நிறுவனமும் தங்கள் உளவளச் சேவையாளர்களின் விபரத்தை தர வேண்டும் எனவும், இம் மாதம் 20 ஆம் திகதி அடையாள அட்டையுடன் பணிக்குச் செல்ல வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

மேற்படி கலந்துரையாடல் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வியாழன் நடாத்தி இதன் செயற்பாட்டை ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பது என்ற தீர்மானத்தோடு கலந்துரையாடல் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் வைத்திய கலாநிதி சியாமளாவின் நன்றியுரையுடன் முடிவுற்றது.




வன்னிப் பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்த பகுதிகளில் கடந்த இரு மாதங்களாக மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மீட்கப்பட்ட மிதிவெடிகள், நிலக்கண்ணிகள், ஆட்லறி மற்றும் மோட்டார் எறிகணைகள், கைக்குண்டுகள் உள்ளிட்ட 1525 வெடிபொருட்கள் நேற்று முன்தினம் மாலை 4. 30 மணியளவில் இயக்கச்சி அகிலன் வெட்டையில் நோர்வே கண்ணிவெடிகள் தகர்க்கும் நிபுணர்கள் முன்னிலையில் தகர்த்தழிக்கப்படுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படுவதை [illegible] பின்னர் தகர்த்தழிக்கப்படுவதையும் படங்களில காண்க. (படம் – லோ, கு)

## அழகக நிலையங்களுக்கு உபகரணங்கள் வழங்கல்

(முல்லை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட அழகக நிலையங்களுக்கு ஒரு தொகுதி உபகரணங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் கடந்த வியாழனன்று முல்லை மக்கள் நலன்புரிச் சங்கததில் வைத்து வழங்கப்பட்டது.

அழகக சங்கங்களின் தலைவர் செ.காண்டீபன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் தமிழீழத்தேசியக் கொடியினை முல்லை.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வம் ஏற்றி வைக்க,மங்கல விளக்கினை கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் அ.சோதிநாதன் ஏற்றிவைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியினை தமிழர் புனர்வாழ்வுக் கழக சுனாமித் திட்டப்பணிப்பாளர் அமுதாப[illegible] ஏற்றினார். தொடர்ந்து கருத்துரைகளை த.பு.கழக முல்லை. மாவட்ட பொறுப்பாளர் மூர்த்தி, கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் அ.சோதிநாதன், முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் தலைவர் அ.மரியராசா ஆகியோர் நிகழ்த்தினார்கள். பின்னர் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. நன்றியுரையினை அழககசங்கச் செயலாளர் சி.சிவகுமார் நிகழ்த்தினார். இந் நிகழ்வில் பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர். (20)

# தலைவரின் கரங்களுக்குப் பின்னால் மலையாக எழுந்து நிற்போம்

## -கொடிகாமம் தே.எ.பேரவை தீர்மானம்

(தென்மராட்சி)

**சமாதானம் என்றாலும் சரி, சண்டைஎன்றாலும் சரி தலைவரின் கரங்களுக்கு பின்னால் மலையாக தமிழ் மக்களாகிய நாம் எழுந்து நிற்போம் என கொடிகாமம் நாவலடி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொடிகாமம் தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கமநிகழ்வில் பேராளர்கள் ஏகமனதாகத் தீர்மானம் எடுத்துள்ளனர்.**

தமிழ் இனத்தின் வாழ்வுரிமையை இனவாத பயங்கரவாதிகளிடம் இருந்து பாதுகாக்க சரியான தருணத்தில் எமது தேசியத் தலைவர் எடுக்கவிருக்கும் முடிவை தமிழ்மக்களாகிய நாம் முழு மனதுடன் ஏற்றுக் கொள்வதுடன் சமாதானம் என்றாலும் சரி, சண்டை என்றாலும் சரி தலைவரின் கரங்களுக்குப் பின்னால் மலையாக நாம் எழுந்து நிற்போம் என அந்தத் தீமானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் மருத்துவர் கந்தையா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈகச்சுடரினை மாவீரர் குமரனின் தந்தை இராஜேந்திரம் ஏற்றி வைத்தார். இந்த நிகழ்வில் பெருந்தொகையான பொதுமக்களும் பேராளர்களும் கலந்து கொண்டனர். (28)

# படையினரின் தடை அரணை அகற்ற கைதடிப் பொதுமக்கள் கோரிக்கை

(தென்மராட்சி)

கைதடிச்சந்தியில் வீதிக்குக் குறுக்காக பொதுமக்களின் போக்குவரத்துத்துக்கு இடையுறு கொடுக்கும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறிலங்காப் படையினரின் காவலரணை உடனடியாக அகற்றவேண்டுமென கைதடி வாழ் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த கால போராட்டங்களின் போது காவலரண் பொதுமக்களால் அழிக்கப்பட்டது. மீண்டும் அதே இடத்தில் இதனைப் படையினர் அமைத்ததற்கு பொது மக்கள் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். (28)

# 31 மீனவர்களின் நினைவாக இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுப்பு

(நல்லூர்)

1986ஆம் ஆண்டு தமிழீழ கடற்பரப்பில் படுகொலை செய்யப்பட்ட குருநகர் மீனவர்கள் 31 பேரின் 19ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வாக நேற்று முன்தினம் காலை புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.இந்நிகழ்வில் அப்பகுதி மக்கள்கலந்துகொண்டனர். (41)

# தென்மராட்சியில் புகழேந்தியின் ஓவியக் கண்காட்சியும் கருத்துப் பகிர்வும்

(தென்மராட்சி)

தென்மராட்சியில் தமிழக ஓவியர் புகழேந்தியின் ஓவியக்கண்காட்சியும் அதனூடான கருத்துப் பகிர்வும் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஈகச்சுடரினை சாவகச்சேரி வணிகர் மன்றத்தைச்சேர்ந்த அப்பனும் மங்கல விளக்கினை ஓவியர் புகழேந்தி, தென்மராட்சி தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் சந்திரசேகரா,தென்மராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன், அமிர்தாம்பிகை வித்தியாலய அதிபர் அருட்சோதி ஆகியோர் ஏற்றி வைத்தனர். கண்காட்சி மண்டபத்தின் நாடாவை ரவிச்சந்திரன் அடிகளார், (லிகோரியர் ஆலய பங்குத்தந்தை) சம்பிரதாய பூர்வமாக வெட்டி நிகழ்வை தொடங்கிவைத்தார். (28)

# பாணின் விலையை குறைக்க முயற்சி

யாழ்.குடாநாட்டில் பாணின் விலையைக் குறைப்பது தொடர்பாக யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் ஆலோசனை நடத்தி வருகிறது.

அந்த வகையில் தற்போது 20 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வரும் 450 கிராம் கொண்ட(ஒரு இறாத்தல்) பாணின் விலையை 19 ரூபாவாக விற்பனை செய்வதற்கான முயற்சிகளில் பேக்கரி உரிமையாளர் சங்கம் ஈடுபட்டுள்ளது. (33)

# யாழ்.இல் ஆறு சீனவியாபாரிகள் சிறிலங்கா பொலிசாரால் கைது

## -24ஆம் திகதிவரை விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஆறு சீன பிரஜைகள் சிறிலங்காப்பொலிசாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்த ஆறு சீன வியாபாரிகளையும் சிறிலங்காப் பொலிசார் அன்று நண்பகல் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி இ.த விக்கினராஜா முன்னிலையில் ஆஜர் செய்தனர். இவ் ஆறுபேர் மீதும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது இவர்கள் தாம் சீனநாட்டைச் சேர்ந்தவர்கள் எனவும், தாம் வியாபார நடவடிக்கைகளுக்காக யாழ்.குடாநாட்டிற்கு வருகை தந்திருப்பதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன் இவ் ஆறுபேரில் நான்கு பேரிடம் கடவுச்சீட்டுக்கள் இல்லை என்றும் ஏனைய இருவர்களிடமும் கடவுச்சீட்டுக்கள் இருக்கின்ற போதும் அவையும் முடிவுகால எல்லையை நெருங்கியவை என்றும் தெரியவந்தது.

இதனால் இவ் ஆறுபேரையும் வரும் 24ஆம் திகதிவரை தடுப்புக் காவலில் வைக்குமாறு உத்தரவிட்ட யாழ்.மாவட்ட நீதவான் இ.த.விக்கினராஜா இவர்களின் நுளைவுச்சீட்டுக்கள், கடவுச்சீட்டுக்கள் மற்றும் இவர்களின் வரவுபற்றிய விடயங்களை குடிவரவு,குடியகல்வுத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விசாரணை நடத்துமாறும் சீன இலங்கை நட்புறவைப்பேணும் விதத்தில் நீதிமன்ற மேற்பார்வையின் கீழ் இவர்களைத் தடுத்து வைப்பதுடன் இதுகுறித்து சீன தூதரகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றிற்குத் தகவல் தெரிவிக்குமாறும் மாவட்ட நீதிபதி இ.த. விக்கினராஜா பொலிசாரை பணித்தார்.இதேவேளை இவ் ஆறு சந்தேக நபர்களும் சட்டவிரோதமாக யாழ்.நகரில் மணிக்கூட்டு வியாபாரத்தில் ஈடுபட்டு இருந்தபோதே பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (27,33)

# வடக்கு கிழக்குப்பகுதியில் யுத்தத்தால் அழிவுற்ற 31 ஆயிரம் வீடுகளை மீளமைக்க உலகவங்கி திட்டம்

(யாழ்ப்பாணம்)

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் வட-கிழக்குப் பகுதியில் அழிவுற்ற 31 ஆயிரம் வீடுகளைக்கட்டி வழங்க உலகவங்கி முன்வந்துள்ளது. இதற்கென உலக வங்கி 77 மில்லியன் டொலர் நிதியினையும் ஒதுக்கிவைத்துள்ளது. இவ் ஒவ்வொரு வீட்டிற்கும் இலங்கை ரூபாயில் இரண்டரை லட்சத்தை வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவ் வீடமைப்புத்திட்டத்தின் கீழ் யாழ். குடாநாட்டினுள் தெரிவு செய்யப்பட்ட 51 கிராமங்களில் முப்பதினாயிரத்து 900 வீடுகள் கட்டிவழங்கப்படவுள்ளது நான்கு ஆண்டுத் திட்டமாக முன்னெடுக்கப்படவுள்ள இவ் வீடமைப்புத் திட்டத்தில் முதலாம் ஆண்டான இவ்வாண்டின் இறுதியினுள் ஆயிரத்து 600 வீடுகள் கட்டி வழங்கவும் தீமானிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே யாழ்.மாவட்டத்தில் உலகவங்கியின் நிதி உதவியின் கீழ் வீட்டுத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான கிராமங்கள் மற்றும் பயனாளிகளை அடையாளங்காண்பது தொடர்பான விசேட கூட்டமொன்று கடந்த வியாழக்கிழமை யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இக் கூட்டத்திற்கு யாழ். மேலதிக அரசாங்க அதிபர் செ.சிவசாமி தலைமை தாங்கினார். உலகவங்கியின் வீடமைப்புத் திட்டத்திற்கான ஆலோசனை இணைப்பதிகாரியான ஹெ.நாராயணன் மற்றும் முன்னாள் யாழ்.அரச அதிபரும் உலகவங்கியின் வீடமைப்புத்திட்ட திட்டப்பணிப்பாளருமான செ.பத்மநாதன் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

அவர்களுடன் பிரதேச செயலர்கள் மாவட்ட காணி உத்தியோகத்தர்கள் மற்றும் அரச சார்பற்ற தொண்டமைப்புப் பிரதிநிதிகளான பலரும் இம் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர்.

அங்கு செ.பத்மநாதன் விபரிக்கையில்; வீடமைப்புத் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட இரண்டரை லட்சம் ரூபாவும் நான்கு கட்டங்களாக பகிர்ந்து வழங்கப்படும். எதிர்வரும் 16 ஆம் திகதி இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் குடும்பங்களிற்கு முதலாம் கட்டமாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு வழங்கப்படும் நிதியினைக் கொண்டு உரிய வீடமைப்புத்திட்டம் முன்னெடுக்கப்படுவதை அவ்வப்பகுதி கிராமிய அமைப்புக்களை மேற்பார்வை செய்யும் அதேவேளை தொழிலாளர்களிற்கு நிலவிவரும் பற்றாக் குறையினைக் கருத்தில் கொண்டு இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படும் என்றார்.

# வடமராட்சி கற்கோவளத்தில் முன்பள்ளிக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு

யாழ் பருத்தித்துறை கற்கோவளம் பிரதேசத்தில் முன்பள்ளி ஒன்றினை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வொன்று கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும், "கல்வனைற்ரர் கான்ஸ் சொவ்ற் சொரிங்கன்'' என்ற ஜேர்மன் நிறுவனமும் இணைந்து இந்த முன்பள்ளிக் கட்டடம் அமைப்பதற்கான நிதியினை வழங்கியுள்ளன.

இந் நிகழ்வில் ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் அதன் பணிப்பாளர் சண்முகரட்ணம் பன்னிரண்டு இலட்சம் ரூபா நிதியினை யாழ். மாவட்டத் தமிழர்புனர்வாழ்வுக் கழகப்பணிப்பாளர் ஜெயராஜிடம் வழங்கியிருந்தார். இந்நிகழ்வில் சுனாமிப் பேரலை அனர்த்தச் செயலணிக்குழு இணைப்பாளர் பாலையாவும், சமூக ஆர்வலர்களும், பெருமளவு பொதுமக்களும் கலந்து சிறப்பித்தனர். அடிக்கல் நாட்டப்பட்டதைத் தொடர்ந்து முன்பள்ளி அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# யாழ்.மாநகர சபைக்கு 4உழவு இயந்திரங்கள் ஐ.நா.அபிவிருத்தித்திட்டம் வழங்க முடிவு

யாழ்.மாநகரசபையின் கழிவு அகற்றும் பணிகளை விஸ்தரிப்பதற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தினால் நான்கு உழவு இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ்.மாநகர பிரதேசத்தில் அன்றாடம் தேங்கும் கழிவுகளை அகற்றுவதற்கு கழிவு காவி உழவு இயந்திரங்கள் பற்றாக்குறையாக இருப்பதாகவும் இதனால் யாழ். மாநகரப்பகுதி கழிவுகளை நகரில் இருந்து அப்புறப்படுத்தும் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராஜா தெரிவித்திருந்ததுடன், இந்த உழவுவியந்திரப் பற்றாக்குறையைப் போக்கி கழிவகற்றும் நடவடிக்கைகளைச் சீர் செய்ய உதவுமாறும் ஐக்கியநாடுகள் அபிவிருத்தித்திட்டத்தினரிடம் கோரியிருந்தார்.

இதற்கமைவாக உடனடியாக நான்கு உழவியந்திரங்களையும், இதற்கான கழிவு காவிபெட்டிகளையும்வழங்க ஐக்கியநாடுகள்அபி விருத்தித்திட்டம் இணங்கியுள்ளது என ஆணையாளர்குணராஜா தெரிவித்தார். (33)

# 'ஏ-9 சமாதான பாதை' தலைப்பில் வவுனியாவில் புகைப்படக் கண்காட்சி

(செட்டிகுளம்)

'ஏ-9 சமாதான பாதை' என்ற புகைப்படக் கண்காட்சி வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் காலை ஆரம்பமானது. இந்த நிகழ்வில் வவுனியா மாவட்டத்தின் மேலதிக அரச அதிபர் திருமதி. சாலஸ், யாழ்.பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாக முதல்வர் திருமதி ராஜேஸ்வரி மகேஸ்வரன்,வவுனியா வடக்குவலய கல்விப்பணிப்பாளர் தண்டாயுதபாணி,வவுனியா குடியிருப்பு பிள்ளையார் கோவில் குருக்கள், மௌலவி ஆகியோர் மங்கல விளக்கினை ஏற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர். இந்தக் கண்காட்சி இன்று 12 ஆம் திகதி வரை வவுனியா நகர சபை மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது

இலங்கை தேசிய சமாதானப் பேரவையினால் பிளிக்ற் அமைப்பின் அனுசரணையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஜேர்மன் இனத்தவரான வோல்டர் கெலரின் புகை படங்களடங்கிய புகைப்படங்களே காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன.

2002 இல் யுத்தநிறுத்த உடன்படிக்கை கைசாத்திட்ட பின்னர் ஏ-9 சாலையில் மக்களின் வாழ்கையில் ஏற்பட்ட மாறுதல்கள் சம்பந்தமான புகைப்படங்களே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே மேற்படி கண்காட்சி கண்டி, தம்புள்ள ரங்கிரி, தம்புள்ள விகாரை, மிகிந்தலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கொழும்பு ஆகிய இடங்களில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

போரின் விளைவுகளை சித்தரிக்கும் காட்சிகளும், சமாதானத்தினை வலியுறுத்தும் காட்சிகளும் புகைப்படங்களாக வைக்கப்பட்டுள்ளன. கண்டிமுதல் யாழ்பாணம் வரைக்கும் எடுத்த காட்சிப்புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (21)

# முல்லை அரசியல்துறை ஏற்பாட்டில் வாராந்தம் கிராமத் தரிசிப்பு

முல்லை மாவட்ட அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் பிரதி வெள்ளிக் கிழமை தோறும் இடம்பெற்று வரும் கிராமதரிசிப்பு நிகழ்வு வரிசையில் நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்புப் பிரசேதத்திலுள்ள கர்ணன் குடியிருப்பு கிராம தரிசிப்பு மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

கர்ணன் முன்பள்ளி வளாகத்தில் புதுக்குடியருயிருப்பு பிரதேசப் பொறுப்பாளர் பிறையாளன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவீரர்களின் உருவப்படங்களுக்கு அவர்களின் பெற்றோர்கள் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தனர். இதனைத் தொடர்ந்து கிராமத்தின் தேவைகள் தொடர்பான ஆய்வு இடம்பெற்றது. பிரதேச செயலர் செ. தயாணந்தா, முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் உரையாற்றினர். தொடர்ந்து சிரமதானப் பணிகள் இடம்பெற்றது.இதன் பின்னர் போராளிகள் வீடு வீடாகச் சென்று மக்களின் தேவைகள் இனம் காணப்பட்டு உடன் தீாவுகாணக கூடிய விடயங்களுக்குத் தீர்வு காணப்பட்டன. (08)

# ஜே.வி.பி யின் காலக்கெடு — சு.க.வை காப்பாற்றுவதில் சந்திரிகா தீவிரம்

சிறிலங்காவின் அரசியல் நிலை படிப்படியாகச் சூடேற்றப்பட்டு வந்த போதிலும் இவ்வாரம் அது மிக வேக மாகி தீர்க்கமான ஒரு கட்டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

"ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி"ஓயில் இல்லாத இயந்திரம் போல இரைச்சலுடன் ஓடிக்கொண் டிருக்கிறது. அது தீப்பிடித்து எரியும்



சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வுக்கு ஜே.வி.பி பல்வேறு இடையூ றுகளைக் கொடுத்து வந்துள்ளது.

அதாவது சிறு சிறு விடயங்களுக் கெல்லாம் அது முரண்டு பிடிப்பதாக சனாதிபதி சந்திரிகா எரிச்சலடைந்து ஆட்சியை விட்டு விரும்பினால் வெளியே றலாம் எனக் கூறுமளவுக்கு ஜே.வி.பி மிகவும் மோசமாக நடந்து கொண் டது.

சிறிலங்கா சுதந் திரக் கட்சி தனியாக எப்பொழுதுமே ஆட்சி யமைத்ததில்லை. ஆனால் மற்றெந்தக் கூட்டணி அரசாங்கமும் சந்தித்திராத நித்திய நெருக்கடியை இந்த அரசாங்கம் சந்தித்தது.

நடவடிக்கை என்ன? என்பது குறித்து பல்வேறு ஊகங்கள் தெரிவிக்கப்படு கின்றன.

ஒன்று பாரளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் ஒன்றுக்குச் செல்லுதல். இதனை ஜே.வி.பி மிக ஆவலுடன் விரும்பும். ஏனெனில் கடந்த ஒரு வருடகாலத்தில் தனது அரசியல் செல்வாக்கு மிக அதிகரித் திருப்பதாக அது நம்புகிறது. எனவே தேர்தலில் தனித்துப் போட்டியிட அது விரும்புகிறது.

இரண்டாவது பாராளுமன்றத்தை சில மாதங்களுக்கு ஒத்திவைத்தல் பின்னர் ஏனைய கட்சிகளின் ஆதர வைப் பெற்று ஆட்சியைத் தொடர்ந்து நடத்துதல் ஆனால் இதற்கான சாத்தி யப்பாடுகள் அரிதாகக் காணப்பட் டாலும், ஜே.வி.பி யிலிருந்து குறிப் பிட்டதொகை அங்கத்தவர்கள் வெளி யேறிவரலாம் என்ற எதிர்பார்ப்பு சிறி

ஆர்ப்பாட்டமொன்றை நடத்தப் போவ தாக ஜே.வி.பி யின் பிரச்சாரச் செய லாளர் விமல் வீரவன்ச கூறினார். இந்த அமைப்பில் ஜே.வி.பி முக்கிய பங்கு வகிப்பது குறிப்பிடத்தக்கது.

மறுதினம் புதன்கிழமை அது சந்திரிகாவிற்கு விதித்த காலக்கெடு முடிவடைகின்றது. எனவே அது மறைமுகமாக வேறொரு அமைப் பூடாக நின்று நடத்தும் இறுதிப் போராட்டம் அதுவாகவே இருக்கும் அதற்கும் சந்திரிகா மசிந்து கொடுக் காவிட்டால் நேரடிப் போராட்டங்களில் அது ஈடுபடும்.

தனித்து அது பொதுக்கட்டமைப் புக்கு எதிரான போராட்டமாக இருக் குமா? அல்லது வேறு பிரச்சினை களை மையமாக வைத்து தொழிற் சங்கங்களைத் தூண்டி வேலை நிறுத்தங்கள், பல்கலைக்கழகங்

கட்டமைப்பை உருவாக்காது விடு வதற்குக்காரணம் தேட வேண்டும் என்ற நிலை இதுவரை இருந்து வந் தது.

ஆனால் ஜே.வி.பி யின் காலக் கெடு விதிப்பானது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு ஒரு கௌரவப் பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த விடயத்தில் கால தாமதம் செய்யாது, முடிவுக்கு வர வேண்டிய கட்டத்தை சனாதிபதி சந்திரிகா அடைந்துவிட்டார் என்றே கூற வேண்டும்.

இப்பொழுது அவர் தனது கட்சிக் குள் உள்ள முரண்பாடுகளை உடன டியாகச் சீர்செய்து கட்சியைப் பாது காக்க வேண்டிய நிலையில் உள் ளார். உடனடியாகவே பிரதமர் மகிந்த








லங்கா சுதந்திரக் கட்சியிடம் உண்டு. குறிப்பாக அமைச்சர் தி.மு. ஜெயரட்ண ஜே.வி.பி உறுப்பினர்கள் பலர் வெளி யேறிவரத் தயாராகவுள்ளதாக அண் மைக்காலத்தில் கூறிவருகிறார்.

இவ்வாறே ஐக்கிய தேசியக்கட்சி யிலிருந்தும் பாராளுமன்ற உறுப்பினர் கள் சிலரை உள்வாங்கும் நோக்க மும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு உண்டு.

மேலும் பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவான சக்திகள் அரசாங்கத்தை ஆதரிக்கும் என்ற நிலைப்பாட்டிலும் பொதுக்கட்டமைப்புக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவைப் பெறும் முயற்சியிலும் சனாதிபதி சந்திரிகா தீவிரமாக ஈடுபடக்கூடும்.

இவ்வாறான நிலையில் ஜே.வி.பி எவ்வாறு நடந்து கொள்ளும் என்ப தற்கு சிறிலங்காவின் தேசிய புல னாய்வுப் பணியகம் எச்சரிக்கை யொன்றைவிடுத்துள்ளது. அதாவது சிறிலங்காவின் அரசியல் பாரிய ஆபத்துக்குள் சிக்கியுள்ளதாக அது கூறுகிறது.

உண்மையில் தேர்தல் உடனடி யாக நடப்பதைவிட இடையில்



பொதுக்கட்டமைப்புத் தொடர்பான சந்திரிகாவின் நகர்வுகளுக்குப் பின் னர் நடைபெறுவதையே ஜே.வி.பி அதிகம் விரும்பக் கூடும்.

ஏனெனில் ஜே.வி.பி இவ்வளவு காலமும் ஆளும் கட்சியில் இருந் தமையால் பொதுக்கட்டமைப்புக்கு எதிரான வெளிப்படையான போராட் டங்களை நடத்துவதைத் தவிர்த்து வந்தது.

வரும் 15 ஆம் திகதிக்குள் பொதுக் கட்டமைப்புத் தொடர்பான நடவடிக் கைகளை கைவிட்டு விட்டதாக சனாதி பதி சந்திரிகா குமாரதுங்க அறிவிக்கா விட்டால் ஆட்சியிலிருந்து விலகிய பின் அவ்வாறான போராட்டங்களை நடத்தி மேலும் செல்வாக்குத் தேடிக் கொள்ளலாம் என ஜே.வி.பி நினைக் கின்றது.

கடந்த வியாழக்கிழமை தேசப்பற் றுள்ள தேசிய முன்னணி நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் வரும் செவ்வாய்க்கிழமை 42 அமைப்பு களைக் கூட்டி கொழும்பில் பெரும்

களில் குழப்பங்களை ஏற்படுத்தி மூடவைப்பது போன்ற அரசிற்குத் தொல்லை கொடுக்கும் போராட்டங் களையும் அது நடத்தலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் அது வெளிப்படையாக நடத்தப்போகும் போராட்டம் பொதுக் கட்டமைப்புக்கு எதிரானதாகவே இருக்கும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பி யின் இந்த அச் சுறுத்தலுக்குப் பணிந்து 15 ஆம் திகதிக்கு முன் ஜே.வி.பி விரும்புவது போன்ற அறிவித்தலை விடுவாரா? என்பது சந் தேகமே. ஏனெனில்அது அவரதும் ,அவரது பரம் பரையினதும், அவரது தந்தை கட்டி வளர்த்த கட்சினதும் அழிவுக்கே வழிவகுக்கும் என்பது தெரியாததொன்றல்ல.

உண்மையில் பொதுக்கட்டமைப் பொன்றை உருவாக்கும் நோக்கம் சந்திரிகாவுக்கு உள்ளதா? என்ற கேள்விக்கு இன்னமும் விடைதெரிய வில்லை இன்னமும் இத்தனையாம் திகதி பொதுக்கட்டமைப்புத் தொடர் பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்ற அறிவிப்பு சனாதிபதி சந்திரிகா வினால் விடப்படவில்லை. அதாவது அதற்கான கூக்குரல்கள் கேட்கின்ற னவே தவிர நடைமுறையில் எதனை யும் காணவில்லை.

ஆனால் இப்பொழுது ஜே.வி.பி யின் காலக்கெடுவிற்குப் பணிந்து அவ்வறான அறிவிப்பொன்றை விடுப் பாரேயானால் ஜே.வி.பி தொடர்ந்து அரசாங்கத்தில் அங்கம் வகிக்கக் கூடும். அரசாங்கம்சிறிது காலத்துக்கு நிலைக்கவும் கூடும். ஆனால் ஜே.வி.பி அடிக்கப்போகும் தம்பட் டத்தை சனாதிபதி சந்திரிகாவாலோ அவரது கட்சியினராலோ தாங்கிக் கொள்ளக்கூடியதாக இராது, பொதுக் கட்டமைப்புத் தொடர்பில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உதவி வழங்கும் நாடுகளுக்கு தொடர்ச்சியாக வழங்கிய உறுதிமொழிகள் விடுத்த சவால்கள் சுனாமி புனரமைப்புத் தொடர்பில் ஏதாவதொரு அமைப் பொன்றை புலிகளுடன் இணைந்து அமைக்கவேண்டிய நிர்ப்பந்தத் திற்குள் சனாதிபதி சந்திரிகாவைத் தள்ளியுள்ளது.

ஒன்றில் சனாதிபதி ஜே.வி.பியை சமாதானப்படுத்தி அவ்வாறான அமைப பொன்றை உருவாக்க வேண்டும் அல்லது காலத்தை இழுத்தடித்து பிரச்சினைகளை ஏற்படுத்தி பொதுக்

ராஜபக்ஷவை முன்னிலைப் படுத்தி ஜாதிக ஹெல உறுமய தேசிய பிக்குகள் முன்னணி என்பனவற்றின் போராட்டங்களை நிறுத்த முற்பட்டார்.

மேலும் ஜே.வி.பி யுடனான சமர சத்திற்கும் அவர் முயற்சிகளை மேற் கொண்டார். இப்பொழுது அவர் அடிக்கடி சந்திக்கும் நபராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இருப்பது



சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கட்சியைக் காப்பாற்றும் முயற்சியில இறங்கிவிட்டதையே காட்டுகிறது.

இதேவேளை பொதுக்கட்டமைப் புக்கு எதிராக நடைபெறும்/ நடை பெறவுள்ள போராட்டங்களை தோல் வியுறச் செய்வது அவரது அடுத்த பணியாக அமைதல் வேண்டும். அது வும் கூட அவரது கட்சியைக் .காப் பதற்கான நடவடிக்கையாகவே அமையும்.

## வேலவன்

இந்நிலையில் மகாநாயக்கர் களைச் சமாதானப்படுத்தும் பணியை முதற்பணியாக அவர் எடுத்துக் கொண்டிருக்கிறார். ஆரம்பத்தில் பொதுக் கட்டமைப்பை ஆதரித்த இரு மகாநாயக்கா கூட சனாதிபதிக்கு எதிராக சங்க நடவடிக்கை எடுக்கப் போவ தாக எச்சரித்தமையை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக் கிறது.

ஆனால் ஜே.வி.பி யினருக்கு எதிரான நடவடிக்கைகள் மிகப் பாரதூரமானவையாக, கடுமையான வையாகவே அமையும் என அவ தானிகள் பலரும் கருதுகின்றனர். ஜே.வி.பி யினர் அரசாங்கத்தை விட்டு ஒரு போதும் விலகமாட்டார்கள் என உறுதியாக முஸ்லிம் பாராளு மன்ற உறுப்பினர்களிடம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருக் கிறார். ஆனால் ஜே.வி.பியால் காலக்கெடு விதிக்கப்பட்டிருக்கிறது. இதுவே நிலைமையின் உக்கி ரத்தை வெளிப்படுத்துகிறது. மொத் தத்தில் அடுத்துவரும் நாட்கள் சிறிலங்கா அரசியல் பரபரப்பு நிறைந்ததாக இருக்கும் என நம்ப லாம்.


வரை பார்த்துக் கொண்டிருக்க முடியாது, என்று கூறியிருக்கிறார். அதன் முக்கிய பங்காளிக்கட்சியான ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க.

அத்துடன் நேற்று முன்தினம் ஜே.வி.பி யினர் கூட்டிய செய்தியாளர் மாநாட்டில் பொதுக்கட்டமைப்புக்குச் சமாதிகட்ட வரும் 15 ஆம் திகதி வரை காலக்கெடு விதித்திருக்கின்றனர்.

இது ஒரு புறமிருக்க ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப் பினர் ஓமல்பே, சோபித்த தேரரின் பொதுக்கட்டமைப்புக்கு எதிரான சாகும்வரை உண்ணாவிரதம் கைவிடப்பட்டுள்ளபோதும் அதுவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒரு தீர்க்கமான முடிவுக்குவர அழுத்தம் கொடுக்கும் ஒன்றாகவே இருக்கின் றது.

ஆனால் ஜே.வி.பி 15 ஆம் திக திக்கு முன்னர் பொதுக்கட்டமைப்பு அமைக்கும் முயற்சியை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கைவிடாவிட் டால் மறுதினம் அரசாங்கத்திலிருந்து வெளியேறிவிடப் போவதாக அறிவித் திருப்பது உடனடியான முக்கிய கவனதத்திற்கு உரியதொன்றாகும்.

இவ்வளவு அவசரமாக ஜே.வி.பி. காலக்கெடுஒன்றை விதிப்பதற்கு ஜாதிக ஹெல உறுமயவின் போராட் டமும் காரணமாக இருக்கலாம். ஏனெனில் ஜாதிகஹெல உறுமய தன்னை முந்திச் செல்வதை ஜே.வி.பி விரும்பாது.





மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைக்கப்பட்ட காலத்திலி ருந்தே சிறிலங்கா சுதந்திரக்கட்சிக் கும் ஜே.வி.பிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் காட்டி

இதற்குக் காரணம் ஜே.வி.பி தான்.

ஐக்கிய தேசிய முன்னணி அர சாங்கத்தை எவ்வாறேனும் கலைத்து விட வேண்டும் என்ற நோக்கத்துடன் முற்றிலும் நடைமுறைச் சாத்திய மற்ற விடயங்களையெல்லாம் ஒப்புக்கொண்டு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த மூலம் அமைக்கப்பட்ட அரசாங்கம் இவ்வாறான நெருக்கடி களைச் சந்தித்ததில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

ஆனால் ஜே.வி.பி எதற்காக இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டதோ அந்த நோக்கம் கை கூடி வருவதாகவே அது கருது கின்றது.

அமைச்சரவை அமைக்கப்பட்ட போதிலிருந்தே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புரிந்துணர்வு ஒப்பந் தத்தை மீறி நடப்பதாகக் குற்றம் சாட்டி வந்த ஜே.வி.பி அப்பொழுது ஆட்சியை விட்டு விலகப் போவ தாகக் கூறவில்லை. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சியை விட்டு விலகு மாறு கூறியபோது கூட சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேண்டுமானால் விலகலாம் என்று கூறியது. ஆனால் இப்பொழுது பொதுக்கட்டமைப்பு விவகாரத்திலே இவ்வாறானதொரு அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றது.

இதற்குக் காரணம் நாட்டின் இறைமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் சனாதிபதி சந்திரிகா ஆபத்தை ஏற் படுத்தவிருந்த வேளையில் அதற்கு எதிராகப் போராடியவர்கள் என்ற பெயரைப் பெறு வதற்காகத்தான் என்பது வெளிப்படை.

இப்பொழுது பொதுக் கட்டமைப்பைக் கைவிட கால அவகாசம் விதிக்கப் பட்டு ஆட்சிக்கும் நாட் குறிக்கப்பட்டுவிட்டது. இது ஜே.வி.பி க்கு உட னடிப்பலனை, அதாவது ஜே.வி.பி எதிர்பார்க்கும் விளைவை ஏற்படுத்துமா? என்பது கேள்விக் குரிய ஒன்றே.

இதற்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுக்கப்போகும் பதில்

# முன்பள்ளிக் கல்வி அபிவிருத்திக்காக கிளிநொச்சியில் வேலைப்பட்டறை

(அலுவலக செய்தியாளர்)

**முன்பள்ளிக் கல்வி அபிவிருத்தி சம்பந்தமான குறுகிய கால, நீண்டகாலத் தேவைகளை இனம்காணும் பொருட்டு சிறுவர் பாதுகாப்பு அமைப்பு, தமிழர் புனர்வாழ்வுக்கழகம் என்பன இணைந்து வேலைப் பட்டறை ஒன்றை கடந்த வியாழனன்று நடாத்தின.**

தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப் பணியகக் கேட்போர் கூடத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பணிப்பாளர் சே. பாண்டியன் தலைமையில் ஆரம்பமான இப் பட்டறையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, சிறுவர் பாதுகாப்பு அமைப்பின் விசேட ஆலோசகர் திருமதி. விஜயலதா, சிறுவர் பாதுகாப்பு அமைப்பின் கல்விப்பகுதிப் பிரதிநிதி பேரின்பநாதன் ஆகியோர் ஆரம்ப உரைகளை நிகழ்த்தினர்.



கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், வலய இணைப்பாளர்களென சுமார் 25 பேர் வரை இப்பட்டறையில் கலந்து கொண்டனர். இங்கு இனங்காணப்பட்ட முக்கிய தேவைகளில் ஆசிரியர் வேதனம், போசாக்குஉணவு வழங்கல் ஆசிரியர்களுக்கான பயிற்சிகளும், அவற்றுக்கான வளநிலையங்கள் என்பன முன்னுரிமைப்படுத்தப்பட்டன. மிகவும் காத்திரமானதாகவும், ஆக்கபூர்வமானதாகவும் அமைந்த இப்பட்டறையில் பங்கு பற்றியோரால் முன்பள்ளிக் கல்வி வளர்ச்சி தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப் பட்டிருந்தன. இவை நிறைவேற்றப் படும் பட்சத்தில் உண்மையிலேயே முன்பள்ளிக்கல்வி பொருத்தமானதொரு அபிவிருத்தியை அடையுமென்றும் குறிப்பிட்ட திருமதி. விஜயலதா குழந்தைகளுக்கு ஒத்திசைவான தேவைகளை எவ்வாறு நிறைவேற்றலாம் என்பதே இன்றைய உலகத்தின் முன்னாலுள்ள முக்கிய ஆய்விற்குரிய விடயமாக இருந்து வருகிறது என்றும் குறிப்பிட்டார்.(கு)

# பாடசாலைத்தொகை மதிப்பு செயலமர்வு

(பூநகரி)

பாடசாலைத்தொகை மதிப்பு செயலமர்வு கடந்த வியாழக்கிழமை காலை பூநகரி நான்காம் கட்டையில் அமைந்துள்ள பூநகரி சிறி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் கோட்டக்கல்விப்பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளை தலைமையில் ஆரம்பமானது. இச்செயலமர்வுக்கு உரிய வலயக்கல்விப்பணிமனையில் திட்டமிடல் மீளாய்வு பிரதிக்கல்விப் பணிப்பாளர் ம. பத்மநாதன் வருகை தந்திருந்தார்.

முதல்நிகழ்வாக அகவணக்கத்தைத்தொடர்ந்து பாடசாலைத் தொகை மதிப்புப் பட்டோலைகள் சம்பந்தமாக கோட்டக் கல்விப்பணிப்பாளர் விளக்கம் அளித்தார். தொடர்ந்து இதில் வருகின்ற சந்தேகங்களுக்கு பிரதிக் கல்விப்பணிப்பாளரும்,கோட்டக் , கல்விப்பணிப்பாளரும் விளக்கமளித்தனர்.

இச்செயலமர்வில் பூநகரி கோட்டத்தைச்சேர்ந்த 27 பாடசாலைகளின் அதிபர்கள் ,சிரேஷ்ட ஆசிரியர்கள் என 39 பேர் கலந்து சிறப்பித்தனர். செயலமர்வு பிற்பகல் 2.00மணிக்கு நிறைவு பெற்றது. (34)



தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சுனாமிக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கில் சுனாமிப் பேரலை அனர்த்தத்தினால் அனைத்து தொழில் உபகரணங்களையும் இழந்த மக்களுக்குக் கடந்தவாரம் இரண்டாம் கட்டமாக ஒரு தொகுதி கடற்றொழில் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. இதனைப் படத்தில் காணலாம். (படம்:-சோதி)

# முல்லைத்தீவு மாவட்ட கலைஞர்கள் அரசியல்துறைச் செயலகத்தில் ஒன்று கூடல்

## –கரும்புலிகள் நாள் நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்திலுள்ள கலைஞர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று செவ்வாய்க்கிழமை முல்லை மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெற்றது.

முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முக்கிய விடயமாக முல்லை மாவட்டத்தில் கலைகள் அழிந்து செல்வதால் அதனை வெளிக்கொணர்ந்து எமது கலைகளை வளர்க்க வேண்டுமென முல்லை .மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

கருத்துரைகளை தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன், தமிழ்சங்கத் தலைவர் சரவணபவன், தமிழீழ திரைப்பட வெளியீட்டுப் பிரிவைச் சேர்ந்த சங்கர் ஆகியோர் வழங்கினார்கள். இந் நிகழ்வில் எழுத்தாளர்கள், நெறியாளர்கள், அண்ணாவிமார்கள், ஆர்வலர்கள் எனப்பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலைஞர்கள் ஒன்றிணைந்த நிர்வாகத் தெரிவும் இடம் பெற்றது. இதில் தலைவராக செ.ரவீந்திரன் செயலாளராக எம்.எஸ். மணியம், பொருளாளராக க.செல்வராசா, உப செயலாளர் இ.செல்வநாயகம், உபதலைவர் சி.நவரத்தினம் ஆகியோர் உட்பட 10 நிர்வாக உறுப்பினர் தெரிவு செய்யப் பட்டனர்.ஆலோசகர்களாக செல்லக்குட்டி சுந்தரம் அப்பா, க.சரவணபவன் ஆகியோர் தெரிவுசெய்யப் பட்டனர்.

இந்தக்கலைஞர் குழு அடுத்த மாதம் நடைபெறவுள்ள கரும் புலிகளின்நினைவு நாளை முன்னிட்டு சமூக நாடகம், இசை நாடகம் என்பவற்றை முல்லை. மாவட்டத்தில் பிரதேச ரீதியாக நடாத்தத்திட்டமிடப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(20)

# வருமான அதிகரிப்புத் திட்டத்தில் 13 பயனாளிகள் பயனடைவு

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் நொராட்,போரூட் நிதியுதவியுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தால் கண்ணகைபுரம் கிராம அலுவலர் பிரிவில் முட்கொம்பன் பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும் வருமான அதிகரிப்புத் திட்ட பயனாளிகளுக்கான உதவி வழங்கும் நிகழ்வு,

அக்கராயன் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் மீ.சுதர்சன் தலைமையில் நடைபெற்றது. த.பு.கழக அக்கராயன் பிரதேச உதவிப்பணிப்பாளர் சி.கோ. நல்லையா, அக்கராயன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் திருமாறன், போரூட் நிறுவன வெளிக்கள அலுவலர் திருமதி சிவனேஸ்வரி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

அடுத்து வருமானத்திட்டத்திற்கான பொருட்களை தமிழீழ காவல்துறையின் அக்கராயன் பணிமனைப் பொறுப்பாளர் நவனீதன், பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர், த.பு.கழக உதவிப்பணிப்பாளர் போரூட் வெளிக்கள அலுவலர், அக்கராயன் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர், திட்ட இணைப்பாளர் ஆகியோர் வழங்கினார்கள்.

கோழிவளர்ப்பு 05 பயனாளிகளுக்கு தலா 10.400 ரூபாய், ஆடு வளர்ப்பு, 05 பயனாளிகளுக்கு தலா 12,150 ரூபாய், மீன் வியாபாரம் 02 பயனாளிகளுக்கு தலா 15000 ரூபா, சிறு வியாபாரம் 01 பயனாளிக்கு 15,000 ரூபா வழங்கப்பட்டது.



வீதி ஓரங்களில் உமி கொட்டப்பட் தீ மூட்டப்பட்டு வருவதன் காரணமாக அவ்வீதியூடாகப் பயணிப்பவர்கள் பலத்தஅசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர். உருத்திரபுரம்- கரடிப்போக்குப் பிரதானவீதி அருகாமையில் உமிக்கும்பல் தீமூட்டப்பட்டுள்ளதனைப் படத்தில் காணலாம். (படம்: சோதி)

# மல்லாவியில் கடும் வரட்சி குடிநீருக்குத் தட்டுப்பாடு

மல்லாவிப் பிரதேசத்தில் கடும்வரட்சி ஏற்பட்டுள்ளதால் குடிநீருக்குப் பெரும்தட்டுப்பாடு நிலவி வருவதால் புலம் பெயர்ந்து வாழும் குடும்பங்கள் குடிநீருக்கு அலைந்து திரிவதை காணக்கூடியதாகவுள்ளது. இதேவேளை மல்லாவி நகர்ப் பகுதிகளிலுள்ள குழாய்க்கிணறுகள் பழுதடைந்துள்ளமையால் நெருக்கடி நிலை அதிகரித்துள்ளது. அனிஞ்சியங்குளம், குமுதன் குடியிருப்பு, யோகபுரம் மகாவித்தியாலயம் அருகாமையிலுள்ள குழாய் கிணறுகள் ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு அருகாமையிலுள்ள குழாய்க் கிணறு என்பனவே பழுதடைந்துள்ளன. அரச,அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு சென்று மக்கள் தங்கள் நிலைமைகளைத் தெரியப்படுத்தியும் இற்றை வரைக்கும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளதால் மக்கள் கவலையடைந்து வருகின்றனர். (24)

# கன்னியாவில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கு நிரந்தர வீடுகளமைக்க நடவடிக்கை

(திருமலை)

புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் கன்னியாக் கிராமத்தில் மீளக் குடியமர்ந்து வரும் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கும் செயற்றிட்டத்தை நிகொட் அமைப்பின் நிதி உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திருகோணமலை மாவட்டச் செயலகம் நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்தது.

கன்னியாப் பிரதேசத்தில் கன்னியா,பீலியடி மற்றும் மாங்காயூற்றுக் கிராமங்களில் தொண்ணூறு வீடுகள், போரின்ால் வீடுகளை இழந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு நிர்மாணித்துக் கொடுப்பதற்கான திட்டத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தயாரித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக கன்னியாக் கிராமத்தில் 30 வீடுகளை நிர்மாணிக்கும்பணி வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

ஒரு வீட்டை நிர்மாணிப்பதற்கு நிகொட் இரண்டரை இலட்சம் ரூபா வழங்குகின்றது. பயனாளிகளின் பங்களிப்புடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வீடுகளை நிர்மாணித்து வருகின்றது.

ஒவ்வொரு வீடும் ஐந்நூறு சதுர அடியில் நிர்மாணிக்கப்பட விருப்பதாக தமிழர் புனர்வாழ்வுக்கழக திருகோணமலை மாவட்ட திட்டமிடல் அலுவலர் வே. கலைவர்ணன் நிகழ்விற்குத் தலைமை வகித்துப் பேசும்போது தெரிவித்தார்.

வீடமைப்புச் செயற்றிட்ட பெயர்ப் பலகையை நிகொட் திருமலை மாவட்ட பிரதித் திட்டமிடற் பணிப்பாளர் ஆர்.உமாகாந்தன் திரை நீக்கம் செய்து வைத்தார். நிகொட் பிரதித் திட்டப்பணிப்பாளர் என்.புகேந்திரன், முதலாவதுவீட்டுக்கான அத்திவாரக் கல்லை நட்டுவைத்தார்.

மாவட்ட திட்டப்பிரதிப் பணிப்பாளர் உமாகாந்தன் நிகழ்வில் பேசும்போது, கன்னியாவிற்கு மின்விநியோகம் 30 இலட்சம் ரூபா செலவில் வழங்கும் திட்டம் ஒன்றை நிகொட் அமைப்பு செயற்படுத்தவிருப்பதாகத் தெரிவித்தார்.

நிகொட் பிரதித்திட்டப் பணிப்பாளர் என்.புகேந்திரன்பேசும்போது "நிகோட்டினால் வடக்குக் கிழக்கில் முதலாவது கிராமிய மீளமைப்புத் திட்டம் கன்னியாக் கிராமத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டது. மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் உயிரோட்டமான பங்களிப்பு இல்லாவிடில் கிராமிய மீளமைப்பு என்பது கனவாகி விடும்" என்று கூறினார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத் திருகோணமலைமாவட்டபிரமுகர் சி.குமரகுருபரன், கன்னியாக் கிராமத்தைச் மீண்டும்கட்டியெழுப்புவதற்கு மீளக் குடியமர்ந்த மக்களின் பங்களிப்பு அவசியம் என்று தெரிவித்தார்.

கன்னியாக் கிராமத்தில் இடம் பெயர்ந்த 176 குடும்பங்களில் 50 சதவீதமான குடும்பங்களே இதுவரை மீளக் குடியமர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (25)

# 19 ஆம் ஆண்டு நினைவலைகள்...

## 12.06.2005 ஞாயிற்றுக்கிழமை

### காலம் கனிகிறது அழைக்கும் காலம் வருகிறது

இருள் சூழந்த தமிழீழந்தனை நாடி வரவேண்டும்
இன்முகத்துடன் அழைக்கின்றோம் வருவீரோ

மருந்தென இங்குள்ளார் மருத்துவர்: மதி[illegible]ந்த மருத்துவ நிபுணர்களே
மதிகெட்ட ஆட்சியரால் மனமுடைந்தோம்,உடலுடைந்தோம்
மாற்ற வருவீரோ.

பெருமையாய் கற்றுத்தேறிய பொறியியலாளர்களே
பெண் ஒருத்தியும், முன்னோரும் பொடியாக்கிய எம் தேசத்தைக்
கட்டியெழுப்ப வருவீரோ.

பொருளியலின் பெருமைமிக்க கலாநிதிகளே
பொல்லாதாரின் பொறாமையாற் சிதைந்த பொருளாதாரம் உயர்த்த வருவீரோ

அருகதையுடையோர், ஆற்றல் மிகுந்தோர், அறிவியலாளர்களே
அன்பு நெஞ்சங்களாம் இங்குள்ள அறிவியலாளரோடு சேர்ந்துழைக்க வருவீரோ

உருவாக்கும் உயிரியல், பயிரியல், உளவியல் வல்லோரே
உரிமையுடனும், பெருமையுடனும் உதவ வருவீரோ

குருவாகித் திருவாக்கும் பேராசிரியர்களே
குறும்புத்தியினரால் குன்றிய கல்வியைக் குன்றின் மேலேற்ற வருவீரோ

கருகிய தமிழீழத்திற்கு வெளியிலிருந்து செய்த சேவைதனை
நாமறிவோம் நன்றி
காலம் கனிகிறது அழைக்கும் காலம் வருகிறது
வரவேண்டும், வரவேண்டும்.



தகவல்:-குடும்பத்தினர்.

46, அத்தியடி புதுவிதி,
யாழ்ப்பாணம்.



(சி-12187)

**லெப்.அர்ச்சுனா (ஆர்.பி.ஜி)**
**சதாசிவம் தமிழரசுவரன்**

அன்னையிடம்:-04.04.1960 பிரபா அண்ணனிடம்:-28.10.1983 மாவீரரிடம்:-12.06.1986

# அத்வானி, இராஜினாமாவை வாபஸ் பெற்றார்

பாகிஸ்தான் பயணம் தொடர்பாக பா.ஜ ஆட்சி மன்றக் குழுவில் நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானத்தை ஏற்று இராஜினாமாவை அத்வானி வாபஸ் பெற்றார். இதனால் பா.ஜ.வில் கடந்த நான்கு நாட்களாக நிலவிய குழப்ப நிலை முடிவுக்கு வந்தது. பா.ஜ.தலைவர் அத்வானி தனது பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தின் போது பாகிஸ் தான் நிறுவனர் முகமது அலி ஜின்னாவை மதசார்பற்றவர் என்று கூறினார்.

இது. பா.ஜ. தலைவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி யது. பா.ஜ.வை ஆதரிக்கும் விசுவ இந்து பரிசத் மற்றும் ஆர்.எஸ்.எஸ் இயக்கத் தலைவர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். அதைத் தொடர்ந்து பா.ஜ.தலைவர் பதவியை அத்வானி கடந்த ஏழாம் திகதி இராஜினாமாச் செய்தார். வாஜ்பாய் உட்பட பா.ஜ. தலைவர்கள் இராஜினாமாவை வாபஸ் பெற வேண்டும் என்று வற்புறுத்தி னார்கள். ஆனால் ராஜினமாவை வாபஸ் பெற அத்வானி முதலில் மறுத்து பின்னர் வாபஸ்பெற ஒப்புக்கொண்டார்.

இராஜினாமாவை வாபஸ் பெற அத்வானி நிபந்தனை விதித்திருப்பதாகக் கூறப்பட்டது. ஜின்னா பற்றி தான் கூறிய கருத்தை பா.ஜ.ஏற்றுக் கொள்வதாக ஆட்சிமன்றக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் அந்த நிபந்தனையாகும்.

# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வி அலுவலகம்–கிளிநொச்சி

**கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்வி கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2005 ஆம் ஆண்டு ஜ"ன் மாதம் 24.06.2005 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.**

| தொ இல | பாடசாலையின் பெயரும் வேலை விபரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | இக்ராட் இல |
|---|---|---|---|---|
| 01. | கிளி/புளியம்பொக்கணை நாகேந்திரா வித்தி 100'x25' பாடசாலைக் கட்டடம் அமைத்தல். | 250/= | 2500/= | எம் 7 |
| 02. | கிளி/வட்டக்கச்சி ம.வி 36'x27' கட்டடத் திருத்தம். | 250/= | 2500/= | எம் 9 |
| 03. | கிளி/கண்டாவளை ம.வி 160'x20'', 60'x20' கட்டடங்கள் திருத்தம். | 250/= | 2500/= | எம் 9 |
| 04. | கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி 110'x25' இருமாடிக்கட்டட மிகுதி வேலை. | 250/= | 2500/= | எம் 9 |
| 05. | கிளி/தருமபுரம் ம.வி வகுப்பறை பிரித் தடைத்தல். | 250/= | 2500/= | எம் 9 |
| 06. | கிளி/பரந்தன் இந்து ம.வி 120'x25' கட்டடத் திருத்தம். | 250/= | 2500/= | எம் 9 |
| 07. | கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை வகுப்பறைத் திருத்தம். | 250/= | 2500/= | எம் 9 |
| 08. | கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை நீர் விநியோகம் தொடர்பான வேலைகள். | 250/= | 2500/= | எம் 9 |
| 09. | கிளி/நாச்சிக்குடா அ.த.க. பாடசாலைக் கட்டடத் திருத்தம். | 250/= | 2500/= | எம் 9 |

**01.** (அ) மேற்படி வேலைக்கு இக்ராட் (ICRAD) நிறுவனத்தின் 07,09 உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவு கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர் களாவார்கள்.

(ஆ) பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தங்களால் இவ் வேலையைச் செய்து முடிக்க முடியுமானால் தங்கள் பாடசாலைக்குரிய கேள்விப்பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். பாடசாலை அபிவிருத்திச்சங்கத்திற்கு முதலாம் பந்தி (அ) இல் குறிப்பிட்ட சட்ட திட்டமும், மீளளிக்க முடியாத வைப்புப் பணமும் விலக்களிக்கப் பட்டுள்ளது.

**02.** கேள்விப்பத்திரங்களில் பெறுமதி சேர் வரி (VAT) 15% சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடல் வேண்டும்.

**03.** மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தைக் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 2005.06.13 ஆம் திகதியில் இருந்து 23.06.2005 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகப் பாடசாலைகள் வேலைகள் கிளையில் பொறியியலாளரிடம் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**04.** விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும்ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறையில் இட்டு, கடித உறையின் இடதுபுற மேற்பக்க மேல் மூலையில் வேலையின் விபரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறையிலிட்ட இருபிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தக்காரரின் முத்திரை இடப்பட்டு ஏ:9 வீதி சிங்கள மகாவித்தியாலயம் கிளிநொச்சி எனும் முகவரியில் அமைந்துள்ள கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2005 ஜூ ன் மாதம் 24 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னராக இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட காலத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**05.** கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன், மேலதிக விபரங் களையும் பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

*த. குருகுலராஜா,*
*வலயக்கல்விப் பணிப்பாளர்,*
*வலயக் கல்வி அலுவலகம்,*
*கிளிநொச்சி.*

ஏ:9 சாலை,
சிங்கள மகாவித்தியாலயம்,
கிளிநொச்சி,
2005.06.09

(சி.12199)

# 'வந்தே மாதரம்' பாடலால் ஆந்திராவில் புதிய சர்ச்சை

இந்திய மத்தியபிரதேச மாநிலத்தில் ' வந்தேமாதரம்'' பாடலால் புதிய சர்ச்சை ஏற்பட்டுள்ளது.மத்திய பிரதேச மாநிலத்தில் முதல்-மந்திரி பாபுலால்கவுர் தலைமையில் பா.ஜனதா ஆட்சி நடந்து வருகிறது.இந்நிலையில் மத்திய பிரதேச அரசு புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. மந்திரிசபை கூட்டம் தொடங்கும் முன்பு 'வந்தே மாதரம்' பாடலைப்பாடுவது என்றும், அரசாங்க அலுவலகங்களில் பணி தொடங்கும் முன்பு மாதத்தில் ஒரு முறை அந்தப் பாடலைப்பாட வேண்டும் என்றும் அறிவித்தது.

இந்த 'வந்தே மாதரம்' பாடல் விவகாரம் மாநிலத்தில் அரசியல் கட்சிக ளிடையே சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது. ஆளும் கட்சி வரவேற்புத் தெரிவிக்க, எதிர்க்கட்சிகள் அனைத்தும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள் ளன.முதல் மந்திரி பாபுலால்கவுர் கூறும் போது," இப்பாடலைப் பாடுவதால் தேசிய உணர்வு ஏற்படும். அரச ஊழியர்களிடையே நேரம் தவறாமை வள ரும்,'' என்று தெரிவித்தார். ஆனால் காங்கிரஸ் மற்றும் இடதுசாரிக் கட்சி களோ,"முக்கிய பிரச்சினைகளில் இருந்து மக்களை திசை திருப்ப முயற்சிக் கிறது. இந்துத்துவ கொள்கையைத் திணித்து கபட நாடகம் ஆடுகிறது'' என்று குற்றம் சாட்டுகின்றன.

# சிறைக் கைதிகளுக்கு தொலைபேசி வசதி

கேரளாவில் சிறைகளில் இருக்கும் கைதிகள் தங்கள் உறவினர்களுடன் பேச தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படவிருக்கிறது. இத்திட்டம் விரைவில் அமுலுக்கு வரவுள்ளது.

இது பற்றிய விபரமான அறிக்கை தரும்படி சிறைத்துறை அதிகாரிக்கு முதல் மந்திரி உம்மன் சாண்டி உத்தரவு பிறப்பித்துள்ளார். இதனைத் தொடர்ந்து சிறைத்துறை அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வருகிறார்கள். முதல் மந்திரியிடம் விரைவில் அறிக்கை தாக்கல் செய்யவிருக்கிறார்கள்.

இதனையடுத்து சிறைக்கைதிகளுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுக்கும் திட்டம் அமுலுக்கு வரும். இது பற்றி சிறை அதிகாரி கூறு கையில், "உலகில் பல்வேறு இடங்களில் இத்தகைய வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. எனவே இதை கேரளாவில் ஏன் அமுல்படுத்தக் கூடாது" என்றார்.

# தொழிற் பயிற்சிநெறி-விண்ணப்பங்கோரல்

யு.என்.எச்.சி.ஆர் (**UNHCR**) நிறுவனத்தின் நிதியுதவியு டன் மற்றும் ஜப்பானிய அரசாங்கம் வழங்கும் நிதியுதவி யுடனும், உலக உணவுத்திட்டம் வழங்கும் உணவுப் பொருட்களின் உதவியுடனும் ஜப்பானிய உறவுப்பால நிறுவனமும் (**BAJ**), கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனமும் (**REERDO**) இணைந்து 155ஆம் மைல்கல் ஏ-9 வீதி, கிளிநொச்சியில் நடாத்தும் தொழிற்பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சி நெறிகள்:-**

01) உழவு இயந்திரத்திருத்தம் (இருபாலாரும்)
02) தையல் (பெண்கள்)

**பயிற்சி நெறிக்கான காலம்:**-06 மாதங்கள்

**தகைமைகள்:-**

0 17-29 வயதிற்குட்பட்டவராயிருத்தல் வேண்டும்.
0 ஆண்டு 10 வரை கல்வி கற்றவராயிருத்தல் வேண்டும்.
0 நலிவுற்ற குடும்ப அங்கத்தவராயிருத்தல் வேண்டும்

**பயிற்சி அனுகூலங்கள்:-**

0 தொழில்சார் பயிற்சிச் சான்றிதழ்
0 சுயதொழில் முயற்சிக்கான தகுதி
0 இத்தொழில்பயிற்சி நிலையம், மூன்றாவதும், தொழில்சார்பானதுமான கல்வி ஆணைக்குழுவில் (**TVEC**) அங்கீகாரம் பெற்றதாகும். பதிவு இல:- P24/0001

**ஊக்குவிப்பு:-**

பயிற்சிக்காலத்தில் உலக உணவுத்திட்டத்தின் மூலம் உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி:-** 24.06.2005

**குறிப்பு:-**

பயிற்சிக்கான விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரிக் கப்பட்டு சுயவிபரங்கள் சரிவர நிரப்பப்பட்டு தபாலிலோ அல்லது நேரிலோ கீழ்க்குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்பப் படல்வேண்டும்.

**தொழிற்பயிற்சி நிலையம்,**
**155மைல்கல் ஏ–9 வீதி,**
**தொண்டமான் நகர்,**
**கிளிநொச்சி.**

**பணிப்பாளர்.**

*(சி.12191)*

# கரும்புலிகள் நாளை முன்னிட்டு மாபெரும் சைக்கிள், மரதன் ஓட்ட நிகழ்வு


கரும்புலிகள் நாளை முன்னிட்டு தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கிய ஆண், பெண் இரு பாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டியும், 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும் தமிழீழ விளையாட்டுத்துறையினரால் நடாத்த ஏற்பாடு செய்யப் பட்டு வருகின்றது.

மரதன் ஓட்டப் போட்டி சர்வதேச விதிமுறைகளுக்கு அமைவாக 42.9 கி.மீ. தூரம் கொண்டதாக நடைபெறும் போட்டியில் வெற்றி பெறும் வீரர்களுக்கு 20,000, 15,000, 10,000 ரூபா பணப்பரிசுடன், பரிசில்கள் நினைவுக் கிண்ணங்கள் என்பன வழங்கப்படுவதுடன் சைக்கிள் ஓட்டப் போட்டியில் பெற்றி பெறும் வீரர்களுக்கு பணப் பரிசுடன் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர்களிடம் விண்ணப்பம் பெற்று பூர்த்தி செய்யுமாறும் இரண்டு புகைப்படங்களுடன் 30-06-2005இற்கு பிந்தாமல் தமிழீழ விளையாட்டுத்துறை நடுவப் பணியகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (புகைப்படங்கள் இணைக்கப்படாத படிவங்களும், பிந்திக் கிடைக்கும் படிவங்களும் ஏற்றுக்கொள் ளப்படமாட்டாது)



கலிபோர்னியாவில் நடந்த அதிபார குத்துச்சண்டைப் போட்டியில் பிரிட்டன் வீரர் ஆட்லே ஹாரிசன் (இடது) விட்டகுத்தை சமாளிக்கத் திணறுகிறார் ஒகியேயா வீரர் ராபர்ட் டேவிஸ். இந்தப் போட்டியில் ஹாரிசன் வெற்றி பெற்றார்.



முன்னாள் பிரேசிலின் கால்பந்தாட்ட வீரரான பேலேயின் மகனும் அவரது நண்பர்களும் காரில் செல்லும்போது உந்துருளியில் சென்ற ஒருவரை மோதிக் கொன்ற குற்றத்துக்காக ஆறு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. படத்தின் மத்தியில் காணப்படுபவர் பேலேயின் மகன் எட்சன் ஷொல்பிடு நசிமென்ரோ.

# புள்ளி விபரங்களை பார்த்தால் புரியும்

## மார்க் வோவின் கருத்துக்கு வோர்ன் பதிலடி



கடந்த 25அல்லது 30 டெஸ்ட்போட்டிகளில் பந்து வீச்சு, துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயற்பட்டுள்ளேன். என் மீது புகார் சொல்பவர்கள் புள்ளி விப ரத்தை பார்த்து உண்மையை புரிந்து கொள்ளலாம் என மார்க் வோவின் புகாருக்கு பதிலடி கொடுத் துள்ளார் ஷேன் வோர்ன்.

ஆஷஸ் தொடருக்கு முன்பாக அவுஸ்திரேலிய அணி யில் சர்ச்சை கிளம்பியுள்ளது. முன்னாள் வீரர் மார்க்வோ தனது கட்டுரையில் வோர்னுக்கு திறமை குறைந்து விட்டதாக குறிப் பிட்டுள்ளார். பத்து வருடங் களுக்கு முன்பு இருந்த பந்து வீச்சாளராக வோர்ன் இல்லை. அவரது பலமான லெக் பிரேக்,பிளிப்பர் வகை பந்து வீச்சை இப்போது காணஇயலவில்லை. வெறும் துல்லியத்தை மட்டுமே நம்பி காலம் கடத்துகிறார் என்றுமார்க்வோ குறிப்பிட்டிருந்தார். இது தான் பிரச்சினைக்கு முக்கிய காரணம்.

வோ புகாருக்கு கொஞ்சம் காட்டமாக பதிலடி கொடுத் துள்ளா. மார்க் வோ நல்ல நண்பர் தான். ஒவ்வொரு வருக்கும் கருத்துச் சுதந்திரமுண்டு. ஆனாலும் கடந்த 25 அல்லது 30 டெஸ்டில் எனது செயற்பாட்டை பார்த்தால் உண்மை புரியும். என் மீது புகார் சொல்லும் மார்க் தனது டெஸ்ட் புள்ளி விபரத்தையும் பார்க்க வேண்டும் . சமீபத்தில் வலிமை மிக்க அணிகளுக்கு எதிராக (சிம்பாப்வே தவிர) தான் விக்கெட் வீழ்த்தியுள்ளேன். பெரும்பாலும் இரண்டு, மூன்றாம் நாட்களில் பந்து வீசுகிறேன். அப்போது தான் பந்து நன்கு சுழலும். எனது டெஸ்ட் வாழ்வில் சமீபகாலமாக தான் மிகச் சிறப்பாக விளையாடி வருகிறேன். இதை மற்றவர்கள் புரிந்து கொள்ளவேண்டும் என்று ஆவேசப்பட்டார் வோர்ன்.

மார்க்வோவின் புகார் ஏற்கத்தக்கதல்ல. ஏனென்றால் கடந்த 30 டெஸ்டில் வோர்ன் 173 விக்கெட் 820 ஓட்டம் எடுத் துள்ளார்.194 ஒரு நாள் போட்டிகளில் 293 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளார்.123 டெஸ்டில் 583 விக்கெட்டுக்களை கைப் பற்றி உலக சாதனையும் படைத்துள்ளார். ஆக புள்ளி விபரங் களின் படி வோர்ன் சொல்வது போல் அவரது திறமை கொஞ்சம் கூட குறையவில்லை.

# பாக். வீரர் யுகானா கார் மீது கல் வீச்சு



பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் யூசுப் யுகனா வின் கார் மீது மர்மக் கும்பல் ஒன்று கல் வீசித் தாக்கியது.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னதாக மர்ம நபர்கள் சிலர் முகமது சமி வீட்டில் புகுந்து சுமார் 10 லட்சம் ரூபாயை திருடிச் சென்றனர். தற்போது யுகானா கார் மீது நடத்தியுள்ள கல் வீச்சுச் சம்பவம் லாகூரில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. சமீபத்தில் யுகானா சுமார் 38 லட்ச ரூபாய் மதிப்புள்ள மெர்சிடஸ் பென்ஸ் காரை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்தார். நேற்று முன்தினம் இந்தக் கார் மீது மர்மக் கும்பல் ஒன்று கல் வீசித் தாக்கியுள்ளது. இதனால் கார் கண்ணாடி உடைந்தது தவிர பலத்த சேதமும் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன. இச்சம்ப வம் குறித்து முழுமையாக விளக்கம் அளிக் காத யுகானா "கருத்து வேறுபாடு காரணமாக இப்படி நடந்து கொண்டார்கள் என்றார்.

# மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபைக்கு புதிய தலைவர் நியமனம்



மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் சபைக்கு புதிய தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்படவிருக்கிறார். தற்போது தலை மைப் பதவியிலிருக்கும் டெட்டி கிறிப்த் வரும் ஜூலையில் கிரிக்கெட் சபையில் இருந்து ஓய்வு பெறவிருப்பதாலும், 69 வயதை எட்டிய நிலையில் அவர் பொறுப் புடனும், ஆர்வத்துடனும் கடமையாற்ற முடியாதிருப்பதாலும் தொடர்ந்து தெரிவு செய்யப்படுவதை மறுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, அடுத்த மாதம் தெரிவு செய்யப்படவுள்ளவர் எதிர்வரும் 2007ஆம் ஆண்டு நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு ஏற்றவாறு கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டியவராக இருக்கிறார்.

2007ஆம் ஆண்டு நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டிகள் மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெறும் என்பதால் அதற்கான சகல பணிகளையும் மேற்படி கிரிக்கெட் சபைத் தலைவரே பொறுப்பேற்பார்.

இவர் 2003ஆம் ஆண்டு முன்னாள் டெஸ்ட் போட்டிகளின் பந்து வீச்சாளர் விஸ்கோலிடம் இருந்து தலைமைப் பொறுப்பை ஏற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தகுதிச் சுற்று கால்பந்து போட்டி கிரீஸ் அணி அதிர்ச்சித் தோல்வி

உலகக் கோப்பை கால்பந்து தகுதிசுற்றுப் போட்டியில் ஐரோப்பிய சம்பியன் கிரீஸ் அணி தோல்வியைத் தழுவியது.

உலகக் கோப்பை கால்பந்து போட்டி அடுத்த ஆண்டு ஜேர்மனியில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் பங்கேற்க 32 நாடுகள் தேர்வு செய்யப்பட வேண்டும். அவைகளை தேர்வு செய்ய தற்போது தகுதிச் சுற்றுப் போட்டிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

நேற்று முன்தினம் நடந்த ஒரு ஆட்டத்தில் ஐரோப்பியா சம்பியன் கிரீஸ் அணியும், உகரேன் அணியும் மோதின. இதில் உக்ரேன் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. கிரீஸ் அதிர்ச்சித் தோல்வியைச் சந்தித்தது. இன்னொரு ஆட்டத்தில் ஜப்பான் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வடகொரிய அணியை வென்றது. இந்த வெற்றியின் மூலம் ஜப்பான் உலகக் கோப்பை போட்டிக்கு தகுதி பெற்றது. ஆசியாவிலிருந்து தகுதி பெற்ற முதல் நாடு என்கிற பெருமை இதனால் ஜப்பானுக்குக் கிடைத்தது.

மற்றொரு ஆட்டத்தில் நெதர்லாந்து அணி 4-0 என்ற கோல் கணக்கில் பின்லாந்து அணியை வீழ்த்தியது. அடுத்து ஒரு ஆட்டத்தில் சவுதி அரேபிய அணி 3-0 என்ற கோல் கணக்கில் உஸ்பெகிஸ்தான் அணியைத் தோற்கடித்தது. இன்னொரு ஆட்டத்தில் ஈரான் அணி 1-0 என்ற கோல் கணக்கில் பெக்ரேன் அணியை வென்றது.




ஒஸ்ட்ரவா நகரில் நடந்த சர்வதேச தடளப் போட்டி களில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்பிரிவில் மற்றைய வீரர்களை பின் னுக்குத் தள்ளி ஜமேக்கா வீரர் அசாபா பவல் (நடுவில்) முதலிடம் பெற் றார். இவர் 9.85 வினாடி களில் இந்தத் தூரத்தை கடந்தார்.

# கால்பந்து ஜாம்பவான் மரடோனாவுக்கு 80 ஆயிரம் ரசிகர்கள் வாழ்த்து




உலக கால்பந்து ஜாம்பவான் மரடோனா முன்பு இத்தாலியி லுள்ள நேபோலி கால்பந்து கழ கத்தில் சேர்ந்து விளை யாடினார் அப்போது அவருடன் விளை யாடிய வீரர் ஜிரோபெரேரா.

அவர் விளையாட்டில் இருந்து ஓய்வு பெற்றார். இதற்கான வழியனுப்பு விழா நேபிள்ஸ் நகரில் நடந்தது. இதில் மரடோனா கலந்து கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் 80 ஆயிரம் ரசிகர்கள் கலந்து கொண்டனர் அவர்கள் மரடோனாவைப் பார்க்கும் ஆர்வத்துடன் வந்திருந்தனர். தங்கள் கைகளில் மரடோனாவை வாழ்த்தும் வாசகங்களை ஏந்தி வந்திருந்தனர்.

மரடோனாவை கௌரவிக்கும் வகையில் அவரது பிறந்த நாளான ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி கால்பந்து போட்டி ஒன்று நடத்தப்படும் என்று விழா அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

## சிந்தனைக்கு



எமது போராட்டத்தின் வலிமை எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 12-06-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## காலக்கெடு!

பொதுக் கட்டமைப்பு யோசனைகளைக் கைவிட 15 ஆம் திகதி நள்ளிரவு வரை சனாதிபதி சந்திரிகாவிற்கு ஜே.வி.பி காலக்கெடு விதித்துள்ளது. பொதுக்கட்டமைப்பு விவகாரம் இக் காலப்பகுதிக்குள் கைவிடப்படாது போனால் ஆட்சியில் இருந்து ஜே.வி.பி வெளி யேறப்போவதாகவும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அதாவது ஆட்சியைக் கவிழ்ப்போம் என எச்சரித்துள்ளது.

பொதுக்கட்டமைப்பை ஏற்கமுடியாதவர்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேறலாம் எனச்சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பல தடவை கூறிய போதும் ஆட்சியில் இருந்து வெளியேறப் போவதில்லை எனக் கூறிவந்த ஜே.வி.பி தற்பொழுது தாமாகவே ஆட்சியில் இருந்து வெயியேறப்போவதாகக் கூறியுள்ளது. ஆகையினால் இதற்கு தமக்குச் சாதகமான அரசியல் சூழ்நிலை உருவாகிவிட்டதாக ஜே.வி.பி கருதுவதாக அர்த்தம் கொள்வதில் தவறில்லை.

அதாவது ஜே.வி.பி தேர்தல் ஒன்றை எதிர் கொள்ளத் தயராகி விட்டது என்றே கொள்ளத்தக்கதாகும். வேறொரு விதத்தில் கூறுவதனால் ஜே.வி.பி பௌத்த பேரினவாதத்திற்குத் தலைமை தாங்குவதற்கு ஏற்ற காலம் வந்து விட்டதுஎனக் கருதுவதாகவும் கொள்ளலாம்.

ஏனெனில் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக பௌத்த பிக்குகள், மகாநாயக்கர்கள் குரலெழுப்பவும் போராட்டத்தில் இறங்கவும் தயாராகி விட்டனர். மகாநாயக்கர்கள் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தக்கூடாதென சனாதிபதியை எச்சரிக்கும் நிலையும் பிக்குகள் உண்ணாவிரதம்,பேரணி என்பனவையும் நடத்தவும் தொடங்கியுள்ளனர். இதற்கான அரசியல் தலைமையே தற்போது எதிர் பார்க்கப்பபடுவதாயுள்ளது.

பண்டா–செல்வா ஒப்பந்தத்தின் போதும் சரி அதற்குப்பின்னரும் ஆளும் கட்சிகள் தமிழர் தரப்புடன் பேச்சுக்கள், உடன்பாடுகள் மேற்கொண்ட போதும் சரி பிரதான எதிர்க்கட்சிகள் பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளுக்கு தேவைப்பட்ட தலைமைத்துவத்தையும் அரசியல் பலத்தையும் கொடுத்தன. இது பௌத்த சங்கங்களுக்கும், பிக்குகளுக்கும் பலமாகின.

ஆனால் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் இம் முறை எதிர்க்கட்சிகள் தரப்பில் இருந்தும்அல்லாமல் ஆளும் கட்சிக் கூட்டணியில் இருந்தும் அரசாங்கத்திற்கு வெளியில் இருந்தும் ஆதரவு அளிக்கும் கட்சியிடமிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இது சற்று மாறுபட்டதொரு நிலையாகவும் முன்னைய நிலையைவிட அரசாங்கத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கும் ஒரு நிலையாகவுமே உள்ளது.

பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே கட்சியும் ஆதரவானதொரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. ஆயினும் முன்னரைப்போல் அது இனவாதக் கூச்சல் போடமுடியாததொரு இக்கட்டான நிலையில் உள்ளது என்பதே உண்மையாகும். அவ்வாறு இல்லாது விட்டால் ஜே.வி.பினருக்கு இவ்வாய்ப்புக் கிடைக்கப் பெற்றிருக்காது.

இந்த வகையில் பௌத்தசிங்கள பேரினவாதத்திற்குப் புதிய தலைமையாக ஜே.வி.பி உருவாகி வருகிறது. ஏற்கனவே ஜே.வி.பி தீவிரமாக இனவாதம் பேசிவரினும் சனாதிபதி சந்திரிகாவின் அரசாங்கத்திற்கு காலக்கெடு விதித்துள்ளதானது பௌத்த சிங்களப் பேரினவாதத்தலைமை தமது கையில் கிட்டிவிட்டது என்ற நம்பிக்கையின்/ உறுதிப்பாட்டின் அடிப்படையிலேயே ஆகும்.

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பலவீனமடைந்து விட்டாரா? என்ற கேள்வியும் தவிர்க்க முடியாது எழுகின்றது. அதாவது நிறைவேற்று அதிகாரம் சனாதிபதி சந்திரிகாவின் கையில் இருக்கின்ற போதும் சனாதிபதி சந்திரிகாவிற்கு ஜே.வி.பீ சவால் விடக்காரணம் ஒரு பொதுத்தேர்தலைச் சந்திக்கவும் அதன்மூலம் தாம் அதிகாகரத்திற்கு வரமுடியும் என்ற நம்பிக்கை ஜே.வி.பிக்கு ஏற்பட்டமையே ஆகும்.

ஆனால் எது எவ்வாறானாலும் இலங்கையின் அரசியலில் அடுத்தவாரம் பலதிருப்பங்களுக்கும் மாற்றங்களுக்கும் இடமுண்டு என்றே எதிர்பார்க்கலாம். அதாவது ஜே.வி.பியின் காலக்கெடுவிற்கு சனாதிபதி தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டாலும், மாற்றிக் கொள்ளாது போனாலும் அரசியலில் மாற்றங்களும் திருப்பங்களும் சகஜம். அவை இலங்கை அரசியலிலும் ஏற்பட வாய்ப்புண்டு.

இத்திருப்பங்களும், மாற்றங்களும் பொதுக்கட்டமைபிற்கு எதிரானதாக இருப்பின் இலங்கையில் தற்போது நிலவும் பெயரளவிலான அமைதியும்,யுத்தநிறுத்தமும் கூட மிகவிரைவிலேயே முடிவிற்கு வரக்கூடிய ஆபத்தான சூழ்நிலைகள் உருவாகலாம் என்பதைத் துணிந்து கூறிவிடமுடியும்.

# பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்

### - இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பினை ஏற்படுத்து வதற்கான அழுத்தத்தினை இலங்கை அரசிற்கு இந்தியா பிரயோகிக்க வேண்டுமென இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங்கிடம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வேண்டு கோள் விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை கொழும்பு தாஜ் ஹோட்டலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை நட்வர்சிங் சந்தித்த போதே இந்த வேண்டுகோள் விடுக்கபட்டுள்ளது.

மாலை 6-30 மணிமுதல் 7-30 மணிவரை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங்குடன் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் மற்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமாராவ் ஆகியோர் கலந்து கொண்டதுடன் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு சார்பாக பாராளுமன்றஉறுப்பினர்கள் இரா.சம்பந்தன், ஜோசப்பரராஜசிங்கம், மாவை சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொதுக்கட்டமைப்பு என்பது அரசியல் பிரச்சினையல்ல வட, கிழக்கில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்கானதோர் நிர்வாகக் கட்டமைப்பே அது என விளக்கிய கூட்டமைப்பினர், இந்த மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான கட்டமைப்பினை விடுதலைப் புலிகளுடன் இணைந்து அரசு நிறுவுவதற்கு இந்தியா தனது முழு அழுத்தத் தினையும் இலங்கை அரசிடம் பிரயோகிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார். (32)

# இலங்கை-இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தை தடுக்க சகல முயற்சிகளையும் மேற்கொள்வோம்!

### தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ .நெடுமாறன்

(கொழும்பு)

இலங்கை-இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் உருவாகுவதனைத் தடுப்பதற்கு தம்மாலான அனைத்துப்பணிகளையும் மேற்கொள்வதாக தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை அரசிற்கு ராடர் கருவிகளை வழங்குவதோடுவான் படைவிருத்திக்கான உதவிகளை வழங்கவுள்ளதாகவும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர்சிங் வழங்கிய செவ்வி வருத்தத்தை அளிப்பதாக தெரிவித்தார்.

இலங்கை அரசு எந்த நாட்டின் அச்சுறுத்தலுக்காக இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்ய முயல்கிறது? எனக் கேள்வி எழுப்பிய அவர் தற்போது பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்ய முயலும் இந்தியா யுத்தகாலத்தில் தனது சொந்த நாட்டு மக்களை சிறிலங்கா அரசு விமானங்கள் மூலம் குண்டு போட்டு அழித்த போது அதனைத் தடுத்து நிறுத்த முயலவில்லை எனவும் தெரிவித்தார்.

1962 சீனயுத்தம் 70களில் பாகிஸ்தானுடனான முரண்பாடு எல்லாவற்றிலும் இலங்கை அரசாங்கங்கள் இந்திய எதிர்ப்பு நிலையை எடுத்த போது தமிழ் மக்களும் தலைவர்களுமே இந்திய ஆதரவு நிலையை எடுத்தமையையும் நினைபடுத்தினார்.

சேது சமுத்திர திட்டத்தின் மூலம் இலங்கைக்கு இயற்கை சார்ந்தோ அல்லது வேறு விதமாகவோ எந்த வித ஆபத்தும் ஏற்படமாட்டாது எனவும் மாறாக உருவாகவுள்ள காங்கேசன் துறை துறைமுகம் சர்வதேச துறைமுகமாக மாறும் என தெரிவித்த அவர் சேது சமுத்திர திட்டமானது தமிழ் பிரதேசங்களைப் பொறுத்தவரை ஒரு அரிய வரப்பிரசாதம் என சுட்டிக் காட்டினார்.

# ஊடகவியலாளர்சிவராம் படு கொலை தொடர்பாக புளொட் தலைவர் மீது விசாரணை நடத்தப்படும்

### - சிறிலங்கா பொலிசார் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரபல ஊடகவியலாளர் மாமனிதர் டி.சிவராமின் படுகொலை தொடர்பாக புளொட் தேசவிரோதக் கும்பலைச் சேர்ந்த இரு முக்கிய உறுப்பினர்கள் கொழும்பு குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் அதேநேரம், இந்தக் கொலை தொடர்பாக புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தனை விசாரணைகளுக்கு உட்படுத்தவுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்து இக்கொலையுடன் புளொட்டிற்கு தொடர்புடையதாகக் கூறும் பொலிசார் இது தொடர்பாக சித்தார்த்தனின் செயலாளரும், புளொட்டின் முக்கிய உறுப்பினருமான பீற்றரையும் (சிறிஸ்கந்தராஜா) மற்றுமொருவரையும் கடந்த வாரம் கைது செய்து தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தி வருகின்றனர்.

சிவராமை புளொட்டே கொலை செய்ததாகவும், இந்த கொலைக்கான நோக்கம் மற்றும் வேறு விடயங்கள் குறித்து சித்தார்த்தனை விசாரணைக்கு உட்படுத்தவுள்ளதாகவும் பொலிசார் கூறியுள்ளனர். அதேநேரம் இந்தக் கொலை தொடர்பாக சித்தார்த்தனின் பிரத்தியேக செயலாளர் ஆர்.ஆர். என்பவரை தாங்கள் தேடி வருவதாகவும், அவர் தலைமறைவாகிவிட்டதாகவும் அவரை உடனடியாக தங்களிடம் ஒப்படைக்குமாறு பொலிசார் புளொட்டின் தலைமைப் பீடத்திடம் வற்புறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கொலையுடன் கருணா குழுவினருக்கு தொடர்புடையதாகக் கூறப்படுவதனால் சக்தி மிக்க தரப்பொன்றின் ஆதரவுடன் கருணா குழு, ஈ.என்.டி.எல்.எவ். மற்றும் புளொட் அமைப்புக்கள் இணைந்து இதனை மேற்கொண்டிருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது. இதே சமயம் இந்தக் கொலையுடன் அமைச்சர் ஒருவர் தலைமையிலான கட்சி ஒன்றிற்கும் நெருங்கிய தொடர்பிருப்பது தெரியவந்துள்ளதாகவும் கடந்த வாரம் பொலிசார் கூறியுள்ளனர். புளொட் அமைப்பின் முன்னாள் நீண்ட கால உறுப்பினரான சிவராம் அந்த அமைப்பின் அரசியல் பிரிவின் செயலாளராகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

# பொதுக்கட்டமைப்பு பாராளுமன்றில் தாக்கல்; சந்திரிகாவிடம் தெரிவிக்க அமைச்சர்கள் முயற்சி!

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு தொடர்பான ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்வதே ஏற்புடையதாக இருக்கும் என்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் தெரிவிக்க முக்கிய அமைச்சர்கள் சிலர் முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் அனுரா பிரியதர்சன யாப்பா, சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த ஆகியோர் உத்தேசப் பொதுக் கட்டமைப்பு தொடர்பான ஒப்பந்தத்தை பாராளுமன்றத்திற்கு கொண்டு வருவதே நல்லது என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் எடுத்துக் கூறத் தீர்மானித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலுள்ள உறுப்பினர்கள் சிலர் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆகியோரது எதிர்ப்புக்களுக்கு மத்தியில் இந்தப் பொதுக் கட்டமைப்பு தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது ஏற்புடையதல்ல என இந்த அமைச்சர்கள் சந்திரிகா குமாரதுங்கவிடம் எடுத்துக் கூறவுள்ளனர்.

# மீண்டும் இலங்கையின் அரசியல் இனக்கலவரத்தை நோக்கிநகர்கின்றது

## தென்கிழக்காசிய ஆய்வுக்கட்டுரையில் எச்சரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் மீண்டும் ஒரு இனக்கலவரத்தை நோக்கி நகர்வதாக தென்கிழக்காசிய ஆய்வாளர் ஒருவர் எச்சரித்துள்ளார். நேற்று வெளியாகியுள்ள தென்கிழக்காசிய ஆய்வுக் கட்டுரை ஒன்றிலேயே இந்த ஆய்வுத்தொகுப்பு வெளியாகியுள்ளது.

கடந்த ஒரு சில வாரங்களாக இலங்கையில் நடைபெறும் அரசியல், நிகழ்வுகள் இனத்துவேசத்தைத் தூண்டும் ஒரு நடவடிக்கையாக உருப்பெற்றுள்ளது. திருமலை புத்தர்சிலை விவகாரமும், அதைத் தொடர்ந்ததான புத்த துறவிகளின் சத்தியாக்கிரகமும் அதனைத் தொடர்ந்து சனாதிபதி செயலகத்திற்கு முன்பாக புத்த துறவிகளால் மேற்கொள்ளப்பட இருந்த தீக்குளிப்பும் மீண்டும் ஒரு இனக்கலவரத்திற்கு அடியெடுத்து வைத்துள்ளதாகவே ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழர்களின் சனநாயக வழியிலான உரிமைப்போரின் நூறுவருடப் பூர்த்தியில் தற்போது ஈழத்தமிழர்கள் இன்னொரு இனக்கலவரத்தைச் சுமக்கும் நிலைக்குத் தள்ளப்படலாம் என்று பரவலாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்க-செல்வநாயகம் உடன்படிக்கை இவ்வாறே பௌத்த துறவிகளால் கிழித்து வீசப்பட்டதுடன, சத்தியாக்கிரகம் தீக்குளிப்பு என்று தொடர்ந்து ஒரு இனக்கலவரத்திற்கு வித்திட்டிருந்தது.

தற்போது சுனாமிப் பொதுக்கட்டமைப்பு பண்டாரநாயக்கா குடும்பத்தினரின் அரசியல் வரலாற்றில் மீண்டும் ஒரு சவாலாக உருவெடுத்துள்ளது. பண்டாரநாயக்க செல்வநாயகம் உடன்படிக்கை கிழித்து வீசப்பட்டதுடன், பௌத்த துறவிகளால் எரிக்கப்பட்ட போது இலங்கையில் அடுத்த கட்ட வரலாறு தீயிடப்பட்டு விட்டதாக பண்டாரநாயக்கா தெரிவித்திருந்தார்.

தற்போது பொதுக்கட்டமைப்பை அழிப்பதன் மூலம் இலங்கையின் அடுத்த கட்ட வரலாறு அழிக்கப்படுகின்றது என்பதனைத் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. 1920ஆம் ஆண்டு ஜேம்ஸ் பீரிசிற்கும் அருணாச்சலம் என்ற தமிழருக்குமிடையில் தமிழ் மக்களுக்கான உரிமைக்கான பேச்சுவார்த்தை நடைபெற்றது. அது இறுதியில் பௌத்த பேரினவாதத்தால் நசுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து துரைச்சாமி அவர்களால் நான்கு வருடங்கள் கழித்து 1924ஆம் ஆண்டு ஜெயதிலக்கவிற்கும் இடையிலான அடுத்த கட்ட தமிழர் அரசியல் உரிமைக்கான போர் நடைபெற்றது.

அந்த அரசியல் போரும் இறுதியில் பௌத்த பேரினவாதத்தால் நசுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பண்டாரநாயக்காவிற்கும் செல்வநாயகத்திற்குமான அரசியல் போர் நடைபெற்று அதுவும் பௌத்த பேரினவாதிகளால் நசுக்கப்பட்டது.

கால ஓட்டத்தில் மீண்டும் டட்லி சேனநாயக்காவிற்கும் இடையே 1965 இல் அரசியல் போர் நடைபெற்று அதுவும் தோல்வியில் முடிவடைந்தது.

இவ்வாறாக தமிழர் உரிமைகளுக்கான பேச்சுகள் இடம்பெறும் போதெல்லாம் சிங்கள பௌத்த பேரினவாதம் ஒரு இனக்கலவரத்தைத் தூண்டி அரசியல் பேச்சுக்களைக் குழப்புவது கடந்த கால வரலாறு.

எனவே தற்போது தென்னிலங்கை சிங்கள மக்களுக்கு மீண்டும் ஒரு இனக்கலவரத்தைத் தூண்டிவிட வேண்டிய கட்டாய நிலைமை உருவாகியுள்ளது. எனவே தென்னிலங்கை உட்பட சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்கள் மிகவும் அவதானத்துடன் இருப்பதுவும் முன் ஏற்பாடாக செயற்படுவதுமே சாலச் சிறந்ததாகும் என அந்த ஆய்வுக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் அரசியல் குழப்பநிலை குறித்து இந்தியா தீவிரமாக அவதானித்து வருகின்றது!

*–இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சியாம் சரண்*

(கொழும்பு)

சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலை குறித்து தீவிரமாக அவதானித்து வருவதாக இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சியாம் சரண் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங்குடனான கொழும்பு பயணத்தை நிறைவு செய்த பின்னர் டில்லிக்குச் செல்லும்போது விமானத்தில் ஊடகவியலாளர்களிடம் சியாம் சரண் கூறியதாவது;

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான ஆழிப்பேரலை மீளமைப்புக்காக சிறிலங்கா அரசு மேற்கொள்ளவுள்ள பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக சிக்கலான அரசியல் சூழல் நிலவுகிறது.

இந்தச் சிக்கலை அந்நாடு எவ்வாறு எதிர்கொள்கிறது என்பது குறித்து உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம்.

சிறிலங்காவில் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் பல்வேறு அரசுப் பிரதிநிதிகள், அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்புக்களின்போது அரசியல் வேறுபாடுகளைக் கடந்து அனைத்துத் தரப்பினரும் மீண்டும் வன்முறைச் சூழலுக்குள் நாட்டை கொண்டு செல்லாத நிலை ஏற்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார்.

சிறிலங்கா அரசுடனான இரு தரப்பு வர்த்தக உறவை வலுப்படுத்தும் வகையிலான வர்த்தக ஒப்பந்தம் இந்த ஆண்டு இறுதிக்குள் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கின்றோம். சிறிலங்காவில் உள்ளூர் அளவிலான சிறுசிறு வளர்ச்சிப் பணிகளை முன்னெடுக்கவும் இந்திய அரசு தீர்மானித்துள்ளது என்றார் அவர்.

சிறிலங்காவில் பயணம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் ஆகியோரையும் சந்தித்துப் பேசியுள்ளார். (32)

## பொதுத்தேர்தலை நடத்த தேர்தல் திணைக்களம் தயாராகிறது

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவின் ஆலோசனைக்கு ஏற்ப தேர்தல் திணைக்களம் பொதுத் தேர்தலுக்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

வக்காளர் பட்டியலைத் தயாரித்தல் மற்றும் தேர்தல் தொடர்பான ஏனைய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## புலிகளின் விமான தளம் திருமலையில் இல்லை: போர் நிறுத்த கண்காணிப்பு குழு தெரிவிப்பு!

(கொழும்பு)

திருமலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் புதிய விமானத்தளத்தை உருவாக்கி வருவதாக வெளியான செய்திகளுக்கு ஆதாரம் எதுவும் இல்லை என்று இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் ஹெலன் ஓலப்ஸ் டொட்டிர் தெரிவித்தார்.

விமானத் தளம் அமைப்பதாகக் கூறப்படும் பகுதியைக் கடந்த எட்டாம் திகதியே போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு சம்பூர் சென்று நேரில் பார்வையிட்டது என்றும், அங்கு அப்படியான விமானத்தளம் அமைக்கும் முயற்சிகள் எதுவுமில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

## முச்சக்கர வண்டி– உந்துருளி விபத்து; திருநகர் வாசி படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி டிப்போ வீதியில் நேற்று இரவு ஏற்பட்ட முச்சக்கரவண்டி உந்துருளி விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 7.00 மணியளவில் டிப்போ வீதியில் துயிலுமில்லப்பகுதி நோக்கிச் சென்று கொண்டிருந்த முச்சக்கரவண்டியுடன் எதிரில் வந்து கொண்டிருந்த உந்துருளி நேருக்கு நேர் மோதிக் கொண்டது.

இதன் போது உந்துருளியில் பயணித்த திருநகர் கிளிநொச்சியைச் சேர்ந்த மாணிக்கம்- இராசரட்ணம் (வயது-30) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை தமிழீழ காவல்துறையின் வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (கு)

## அம்பாறை சொறிக்கல் முனையில் கைக்குண்டுடன் இளைஞர் கைது

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் சொறிக்கல்முனையில் நேற்று முன்தினம் இரவு இளைஞர் ஒருவர் இரண்டு கைக்குண்டுகளுடன் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்து கொண்டிருந்த இவரை படையினர் நிறுத்தி சோதனையிட்ட போது இவை கண்டு பிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. நவரத்தினம் சிவக்குமார் (வயது-28) என்ற இந்த இளைஞர் மேலதிக விசாரணைக்காக சம்மாந்துறை சிறிலங்கா பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். நேற்று மாலை கல்முனை மாஜிஸ்திரேத் எம்.பிமொகிதீன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 27ஆம் திகதி வரை இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# இனி வசந்தகாலம் சிறுகதை நூல் வெளியீடு

எஸ்.பி.கிருஸ்ணனின் இனி வசந்தகாலம் சிறுகதைகள் நூல் வெளியீட்டு விழா நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்.நல்லூர் நாவலர் வீதியிலுள்ள நாவலர் மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நிகழ்வு தொடங்கியது.

நமது ஈழநாடு ஆசிரியர் எஸ்.இராதேயன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வரவேற்புரையினை கவிஞர் செல்வா ஆற்ற, வாழ்த்துரைகளை சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம், யாழ்.மாநகர மன்ற ஆணையாளர் கலாநிதி க.குணராசா(செங்கை ஆழியன்), தமிழீழ கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் நிகழ்த்தினார்.

வெளியீட்டு உரையை கலை பண்பாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த மு.வளநாடன் நிகழ்த்தினார்.

கவிஞர் நல்லை அமிழ்தன், எழுத்தாளர் யோசேப் பாலா ஆகியோர் ஆய்வுரையினை நிகழ்த்தினர். இந்நிகழ்வில் கலைஞர்கள், படைப்பாளர்கள், எழுத்தாளர்கள் எனப் பெருமளவானோர் பங்கேற்றனர். (41)

### சொருவிலவில்...

என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக அடையாளம் காணப் பட்டுள்ளார்.

தனது இரண்டு நண்பர்களுடன் திம்புலாகல மன்னம்பிட்டி வீதியில் சென்று கொண்டிருந்த போது ரி-56 ரக துப்பாக்கியினால் சுட்டுக் கொல்லபட்டுள்ளார்.

இவருடன் துவிச்சக்கரவண்டியில் சென்ற நண்பர்களான பப்பு எனப்படும் சௌந்தரராஜன் சொரூபன் மற்றும் மன்னம்பிட்டியைச் சேர்ந்த ராஜி ஆகியோர் தொடர்பாக தகவல் எதுவும் இல்லை என அரலகங்வில சிறிலங்கா பொலிசார் தெரிவித்தனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் இம் மூவரும் பயணம் செய்த இரண்டு துவிச்சக்கர வண்டிகளும், அவர்களுடைய பாதணிகளும் காணப்பட்டதாகவும் சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

### தேசிய...

தம்பரஅமிலதேரர் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார் எனத்தெரிவிக்கபட்டுள்ளது.

### ஈ.பி.டி.பி...

வைக்கப்பட்டே இந்தக் கிளைமோர் வெடிக்க வைக்கப்பட்டுள்ளது.

காவலில் இருந்த பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். எனினும் குண்டுத்தாக்குதலை நடத்தியவர்கள் தப்பித்துச் சென்று விட்டதாகவும் வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா மாவட்ட நீதவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் விசாரணைகளை மேற்கொண்டார். வன்னி பிராந்திய பொலிஸ்மா அதிபர் மகிந்த பெத்தேவல உட்பட பல உயர் அதிகாரிகள் சென்று விசாரணைகளை மேற்கொண்டார்கள்.

இதன் பின்னர் வவுனியா பொதுமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களையும் வவுனியா மாவட்ட நீதவான் பார்வையிட்டு விசாரணைகளை நடத்தினார். மேலதிக விசாரணையை மேற்கொள்ளுமாறு வவுனியா பொலிசாருக்கு மாவட்ட நீதவான் உத்தரவிட்டார். இந்த முகாம் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரே ஈ.பி.டி.பி யால் பொறுப்பேற்கப்பட்டது. இதற்கு முன்னர் இந்தக் காரியாலயம் ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதராஜா பெருமாள் அணியினுடையதாக இயங்கியமை குறிப்பிடத்தக்கது. (21,32)

### ஓமல்...

விரதத்தினை கைவிட்டார்.

காலை இவரைச் சந்தித்த மகாநாயக்க தேரர்கள், சனாதிபதியைச் சந்தித்த விடயங்களையும், சனாதிபதியின் கடிதத்தினையும் இவரிடம் காண்பித்துகேட்டுக் கொண்டதற்கிணங்கவே இவர் தனது உண்ணாவிரதத்தினை முடித்துள்ளார் என தெரியவருகின்றது. இவர் சிகிச்சைக்காக கண்டியில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

### மக்கள்...

பினர்கள் நடராஜா ரவிராஜ், சிவநேசன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் ஆற்றினர்.

மீண்டும் ஆர்ப்பாட்ட பேரணியானது உசன் சந்தியை சென்றடைந்தது உசன் 55 ஆவது படை கட்டளை அதிகாரி எம்.ஜி.வி டயிள்யூ ரோகனவிடம் இடம் பெயர்ந்தோர் நலன் புரிசங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் கந்தசாமி மற்றும் தெய்வேந்திராஜா ஆகியோர் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை 12.20 மணியளவில் கையளித்தனர். இப்போராட்டத்தின் தொடச்சியாக வரும் நான்காம் திகதி கொடிகாமத்தில் இருந்து சாவகச்சேரி பிரதேச செயலகம் வரை ஆர்பாட்ட பேரணி நடைபெற இருப்பதாக போராட்ட செலயலணிக்குழு அறிவித்துள்ளது. (28,41,27)

### சனாதிபதி...

வதற்கு முட்டுக்கட்டையைப்போட்டவர்கள் யார் யாரென பெயர் விபரங்களுடன் மக்களுக்கு தெரியப்படுத்தப்போவதாகவும் சனாதிபதிமேலும் கூறியுள்ளார்.சனாதிபதியின் விளக்கத்தைக் கேட்டபின்னர் கருத்துத்தெரிவித்த நிதியமைச்சர் சரத்அமுனுகம இந்தப் பிரச்சினை தொடர்பாக சனாதிபதி தனித்து தீர்மானம் எடுக்கக் கூடாதென்றும் சனாதிபதி முக்கியமா? அல்லது கட்சி முக்கியமா? என்பது பற்றி சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நிறைவேற்றுச் சபையை கூட்டி முடிவு செய்ய வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

இதற்கு சனாதிபதியும் கூட்டத்திற்கு சமுகமளித்திருந்த ஏனைய அமைச்சர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது